# වාර්ෂික වාර්තාව

# ஆண்டு அறிக்கை

# ANNUAL REPORT

# 2013

**වැඩිහිටි තැනැත්තන් සඳහා වූ ජාතික සභාව**

**முதியோர்களுக்கான தேசிய சபை**

National Council for Elders

**සමාජ සේවා අමාත්‍යාංශය**

**சமூக சேவைகள் அமைச்சு**

Ministry of Social Services

# பொருளடக்கம்

முகவுரை……………………………………………………………………..…….....……….……….57

நிறைவேற்று அறிக்கை…………………………………………………………………..……………..…58

அறிமுகம்……………………………………………………………………………………….……..…..59

முதியோர்களுக்கான தேசிய செயலகம்……………………………………………........………………60

தொலைநோக்கு……………………………………………………………………...………..……........60

பணிக்கூற்று……………………………………………………………………………..………………......60

நிறுவன கட்டமைப்பு………………………………………………………………..………………..……61

முதியோர்களுக்கான தேசிய சபையின் தவைரின் செய்தி……………………………..........…….……62

முதியோர்களுக்கான தேசிய செயலக பணிப்பாளரின் அறிக்கை………………….............……………......63

2013 ஆம் ஆண்டு வேலை செயற்திறன் அறிக்கை………………………….............……….........…64

2013 ஆம் ஆண்டின் அபிவிருத்தி செயற்திறன்முதியோர் இல்லங்களைப் புதுப்பித்தலுக்காக நிதியுதவி வழங்கல்…………………………………………………………………….......……………66

நடமாடும் சேவைகள் மூலம் முதியோர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்ட விபரம்………..………67

கிராமிய முதியோர் சங்கங்களை அமைத்தல் மற்றும் நிதியுதவி வழங்கல் ரூ.5,000……………………..68

பிரதேச மட்ட முதியோர் சங்கங்களுக்கு ரூ.7,500/- நிதியுதவி வழங்கல்……………………….…. ….…69

நிதி உதவி வழங்கப்பட்ட பகல் நேரப் பராமரிப்பு நிலையங்கள்…………………………………….70

ஓய்வு பெற இருப்பவர்களுக்கான நிகழ்ச்சி- 2013……………………………………………………..70

முதியோருக்கான குடும்ப உறைவிட நலனோம்பல் சேவை - பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்……………..71

முதியோர் பாதுகாப்புத் திட்டம்……………………………………………………...……………....72

கதிர்காம யாத்திரை விடுதியின் வருமானம் மற்றும் செலவு தகவல்……………………………………...75

சிரேஷ்ட பிரஜைகளுக்காகன ஓய்வூதியத் திட்டம்………………………………………………………....76

முதியோர் பராமரிப்பு சபை………………………………………………………………....……..77

முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் கணக்குக் கொள்கை…………………………………........79

2013 மார்கழி 31 திகதிய நிதி நிலவரக் கூற்று……………………………………………………..…...80

2013 மார்கழி 31 திகதிய நிதி செயற்திறன்ற்று………………………………………………………...…...81

2013 டிசம்பர் 31 திகதிய நிதிப் பாய்ச்சல் கூற்று……………………………………………….... .82

மேலதிகப் பட்டியல்……………………………………………………………………………...…....83

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கருத்து……………………………………………..….........87

# முகவுரை

2000 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய சமூக சேவைகள் அமைச்சின் கீழ் நிறுவப்பட்டுள்ள முதியோர்களுக்கான தேசிய செயலகம், இலங்கை முதியோர் சமுதாயத்தின் மேம்பாட்டுக்காக எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள், கொள்கைசார் தீர்மானங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டின் இலங்கையிலுள்ள முதியோர் சமுதாயத்தின் நலன்புரியினை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு அமுற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் செயற்பாட்டு அறிக்கையினை, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு முன்வைப்பது, 2013 ஆம் வருடத்தின் இவ்வாண்டு அறிக்கையின் நோக்காகும்.

சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டின்போது முதியோரின் சுய கௌரவம், சுதந்திரம், பங்களிப்பு. பாதுகாப்புக்காகப் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், மிகவும் விளைதிறனான சேவையொன்றை நிறைவேற்றுவதற்கு முடிந்துள்ளமை எமக்குக் கிடைத்த அதிஸ்டமாக உள்ளது.

மேலும் மகிந்த சிந்தனை கொள்கையினூடாக ஆச்சரியமிக்க இலங்கையினை உருவாக்குவதற்காக கடந்த சந்ததியினரின் பங்குதாரர்களான முதியோர்களுக்கிடையே 70 வயதிற்கு மேற்பட்ட மூத்த பிரஜைகளுக்கு ரூபா. ஆயிரம் கொடுப்பனவினை வழங்கும் பொருட்டு அர்ப்பணிப்புடன் செயற்பட்டமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

# நிறைவேற்று அறிக்கை

முதியோருக்கான தேசிய செயலக அலுவலகம் 2013 ம் வருடத்தில் இந் நாட்டின் முதியோர் சமூகத்தின் சேமநலத்திற்காக இலங்கை அடங்கலும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. இதனால் 2013ல் திட்டமிடப்பட்டவாறு பௌதீக, நிதி முன்னேற்றங்களை எங்கள் நிறுவனம் அடைவதற்கு இயலுமாகவிருந்தது.

நடைமுறைப்படுத்தப்பட்ட இந் நிகழ்ச்சி திட்டங்களிடையே, மகிந்த சிந்தனையில் முன்மொழியப்பட்டவாறு 70 வருடங்களுக்கு மேற்பட்ட முதியோருக்கு ரூபா. 1000.ஃ.ஸ்ரீ வழங்கல் பிரதானமானதாகும். கௌரவ அமைச்சர், பிரதி அமைச்சர், அமைச்சை சேர்ந்த பணியாளர்கள் ஆகியோரால் சவால்களை மேற்கொள்ள நல்கிய உதவியும், வழிகாட்டலும் குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர், அதன் ஆளணி உறுப்பினர்கள், முதியோருக்கான தேசிய செயலகத்தின் பணியாளர்கள், பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்த்த விடயத்திற்கு பொறுப்பான அதிகாரிகளுக்கும் எமது விசேட நன்றியைச் செலுத்துகின்றேன்.

# அறிமுகம்

கடந்த பல தசாப்பதங்களாக நாட்டில் காணப்படும் தொடர்ந்து இடம் பெறும் சமூக, பொருளாதார அபிவிருத்திகளின் விளைவாக சுகாதார, ஊட்டச்சத்து, கல்வி ஆகிய துறைகளில் தென்படும் மேம்பாடுகளைக் காணக்கூடியதாகவிருக்கின்றது. மேற்குறிப்பிட்ட காரணிகளின் விளைவாக பிறப்பு இறப்பு விகிதத்தில் வீழ்ச்சி, எதிர்பார்க்கும் ஆயுட்காலம், முதியோர் சனத்தொகையின் அதிகரிப்பு ஆகியன காணப்படுகின்றன. இலங்கையில் முதியோர் சனத்தொகையில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதன் பிரகாரம், அடுத்த தசாப்தத்தில் நாட்டின் முதியோர் சனத்தொகையின் தற்போதைய விகிதமாகிய 12.2மூ லிருந்து 22மூ மாக வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

முதியோரின் வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்துவதற்கான சேமநல வசதிகளை தரமுயர்த்தல் அவசியமாகும். முதியோரின் உரிமைகளும் கூட பாதுகாக்கப்படல் வேண்டும். இதனை அடைவதற்காக முதியோருக்கான தேசிய செயலகம் உயர் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றது. முதியோர் சமூகத்தை சக்தியூட்ட 2013ம் வருடத்தில் பல்வேறு நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. கிராமிய முதியோர் குழுக்கள், மாகாண முதியோர் சபைகள், மாவட்ட முதியோர் சபைகள் ஆகியவற்றைப் பதிவு செய்தல், நாட் காப்பக நிலையங்களுக்கு நிதியுதவியளித்தல், மனோநிலை மற்றும் ஆன்மீக விருத்திகளை மேம்படுத்த உளவியல் ஆற்றுப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல், முதியோர் காப்பாளர்களைப் பயிற்றுவித்தல் என்பன எம்மால் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதான நடவடிக்கைகளில் சிலவாகும்.

முதியோர் தனிமையான வாழ்க்கையை நடத்துவதைத் தடுப்பதும், சமூகத்தில் அவர்களின் பங்குபற்றலை மேம்படுத்தலும் எமது முக்கிய நோக்கமாகும்.

## முதியோர்களுக்கான தேசிய செயலகம்

முதியோர்களுக்கான தேசிய செயலகமும், முதியோர்களுக்கான தேசிய சபையும் 2000 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க முதியோஉரிமைகளைப்துகாக்கும் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ளன.


### *தொலைநோக்கு*

**“**இலங்கை மக்களை வினைத்திறன் மிக்கதும் சக்தி வாய்ந்ததுமான வயோதிபமடைதலை நோக்கிக் கொண்டு செல்லுதல்**”**


### *பணிக்கூற்று*

‘‘முதியோர்களின் நலன்களை மேம்படுத்துதல்,
உரிமைகளைப் பாதுகாத்தல், என்பனவற்றின் ஊடாக அவர்கள் கௌரவமாகவும், கண்ணியமாகவும்,
சுதந்திரமாகவும் வாழ வழி சமைத்தல்’’

# நிறுவன கட்டமைப்பு


முதியோர்களுக்கான தேசிய சபை
முதியோர்களுக்கான தேசிய செயலகம்
பணிப்பாளர் (1)
உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) (1)
உதவிப் பணிப்பாளர் நிர்வாகம் (1)
நீதி ஆலோசகர் (1)
கணக்காளர் (1)
நிர்வாக உத்தியோகத்தர் (1)
முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர் - 98
முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர் - 2
முகாமைத்துவ உதவியாளர்கள் (1)
முகாமைத்துவ உதவியாளர்கள் (2)
முகாமைத்துவ உதவியாளர்கள் (1)
முகாமைத்துவ உதவியாளர்கள் (2)
சாரதி (2)
அலுவலக உதவியாளர்(1)
அலுவலக உதவியாளர் (1)
அலுவலக உதவியாளர் (1)

# முதியோர்களுக்கான தேசிய சபை - 2013




| பெயர் | பதவி |
|---|---|
| 1. இமெல்டா சுகுமார் | தலைவர் |
| 2. என்.கே.அபேரத்ன | உப தலைவர் |
| 3. செல்வி.பி.கெ.எஸ்.சுபோதினி | செயலாளர் |
| 4. திருமதி.அனுஸா கோகுல பிரணாந்து | சபை உறுப்பினர் |
| 5. திருமதி.வீ.ஜெகராஜசிங்கம் | சபை உறுப்பினர் |
| 6. திரு.டர்மசிறி பீரிஸ் | சபை உறுப்பினர் |
| 7. கௌரவ.எஸ்.எஸ்.விஜேரத்ன | சபை உறுப்பினர் |
| 8. கலாநிதி.அனில் திசாநாயக்க | சபை உறுப்பினர் |
| 9. திரு.டபிள்யு.வி.கன்னங்கர | சபை உறுப்பினர் |
| 10. திரு.திலக் த சொய்சா | சபை உறுப்பினர் |
| 11. செல்வி.கீதா விமலவீர | சபை உறுப்பினர் |
| 12. திரு.பீ.பண்டாரநாயக்க | சபை உறுப்பினர் |
| 13. திரு.பீ.டபிள்யு.திலகரத்ன பண்டா | சபை உறுப்பினர் |
| 14. திரு.ஏ.அப்டோன் சில்வா | சபை உறுப்பினர் |
| 15. திரு.கே.ஏ.குணதாச பெரேரா | சபை உறுப்பினர் |
| 16. திரு.பீ.எச்.சிறிபால | சபை உறுப்பினர் |

# முதியோர்களுக்கான தேசிய சபையின் தலைவரின் செய்தி- 2013

இலங்கை தற்பொழுது முகம் கொடுக்கும் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளிடையே, முதியோர் சனத்தொகையின் துரித வளர்ச்சி பிரதான பிரச்சினைகளில் ஒன்றாகும். ஆகவே முதியோருக்கான தேசிய சபையின் மீது சுமத்தப்பட்டுள்ள சமூகப் பொறுப்பு நளாந்தம் வளர்ந்து வருகின்றது என்பது கண்கூடாகத் தெரிகின்றது. இது முதியோரின் சேமநலத்திற்கும், பாதுகாப்பையும் அளிக்கும் பொருட்டு திட்டமிட்டு இலக்குகளை நடைமுறைப்படுத்துவதை அதிக கவனம் செலுத்துவதை இச் சபைக்கு மிகவும் முக்கியமான பணியாக ஆக்கியுள்ளது.

அதன் பிரகாரம் மேற்குறிப்பிட்ட பணிகளை அடைவதற்காக எடுக்கப்பட்ட கொள்கைத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தியன் ஊடாக சென்ற காலங்களுடன் ஒப்பிடும் போது, இச் சபை பரந்த தேசிய சேவையை ஆற்ற முடிந்துள்ளது. இது எமக்கு பூரண திருப்தியை அளித்துள்ளது.

ஆகவே பாரிய பொறுப்புடன் அளப்பரிய சேவையை வழங்கிய முதியோருக்கான தேசிய சபையைச் சேர்ந்த சகல உறுப்பினர்களுக்கும், முதியோருக்கான தேசிய செயலகத்தின் பணிப்பாளரும், பணியாளர்களுக்கும், முதியோர் பராமரிப்பு சபைக்கும் எனது பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன் முதியோரின் சேமநலத்தையும், பாதுகாப்பையும் மேம்படுத்த எங்களுக்கு பல்வேறு வழிகளில் உதவிய அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் எனது விசேட நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

**இமெல்டா சுகுமார்**

செயலாளர்

சமூக சேவைகள் அமைச்சு

தலைவர்

முதியோர்களுக்கான தேசிய சபை

# முதியோர்களுக்கான தேசிய செயலக பணிப்பாளரின் அறிக்கை 2013 ஆண்டு - வேலை செயற்திறன் அறிக்கை

முதியோர்களுக்கான தேசிய சபையின் கொள்கை ரீதியான தீர்மானங்கள் மற்றும் நிச்சயிக்கப்பட்ட வழிமுறையின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு, முதியோர்களுக்கான செயலகத்தின் மூலம் நடப்பு ஆண்டில் அடைந்துள்ள செயலாற்றல் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளது.

1. **ரூபா 1000 சிரேஸ்ட பிரஜை கொடுப்பனவு**

   வயது 70 க்கு மேற்பட்ட குறைந்த வருமானம் பெறுகின்ற சிரேஸ்ட பிரஜைகள் 179910 அளவிலானவர்களுக்கு 2013 ஆம் ஆண்டில் ரூபா 1000 கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

2. **கிராமிய முதியோர்களுக்கான குழு அமைத்தல் மற்றும் நிதியுதவி வழங்கல்**

   கிராமிய முதியோர் அமைப்புக்கள்1557, பிரதேச முதியோர் அமைப்புக்கள் 34இற்காகவும் ரூபா 8.04 மில்லியன் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

3. **முதியோர்களுக்காக அடையாள அட்டை வழங்கல்**

   வருடத்தினுள் ரூபா0.407 மில்லியன் செலவில் முதியோர்கள் 15748 பேர்களுக்கு முதியோர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

4. முதியோர் பகல் நேர நிலையங்களுக்காக நிதி வழங்குதல்

   2013 ஆம் ஆண்டினுள்முதியோர் பகல் நேரநிலையங்கள் 31 இற்காக ரூபா 0.775 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது.

5. **பயிற்சயளித்தல் மற்றும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள்.**

   தேசிய மட்டத்தில் முதியோர்களின் ஆலோசனைத் திறன்களை மேம்படுத்தும் இரண்டுநாள் பயிற்சிப்பட்டறைகள் 06 மற்றும் மாகாண மட்டத்தில் முதியோர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் 09 ஓய்வு பெற முன்னரான நிகழ்ச்சித் திட்டம் 03 நடாத்தப்பட்டுள்ளதுடன் அதற்காக ரூபா3.211 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.

6. **இலவசமாகக் கண்வில்லை மற்றும் செவிப்புல உபகரனங்கள் வழங்குதல்**

   2013 ஆம் ஆண்டு முதியோர்கள் 1782 பேர்களுக்கு வைத்திய சிபாரிசின் பிரகாரம் கண்வில்லை வழங்கப்பட்டுள்ளதுடன் 68 பேர்களுக்கு செவிப்புல உபகரனங்கள் வழங்கப்பட்டுள்ளன . செலவு செய்யப்பட்ட பணம் ரூபா4.01 மில்லியனாகும்.

7. **சர்வதேச முதியோர் தினக் கொண்டாட்டம்**

   ''முதுமையடைதலுக்கான வாழ்நாள் முழுவதும் தயாராகுதல்.''எனும் தொனிப்பொருளில் 2013 ஆம் ஆண்டு முதியோர் தினக்கொண்டாட்ட விழா, 2013.10.01 ஆம் திகதி கௌரவ அமைச்சரின் தலைமையிலும் மற்றும் நாட்டின் பல திசைகளிலிருந்தும் வந்த முதியோர்களின் பங்களிப்படனும் நடாத்தப்பட்டதுடன் அதற்காக ரூபா6.12 மில்லியன் செலவு செய்யப்பட்டது.

8. **முதியோர் இல்லங்களுக்கு நிதியுதவி வழங்குதல்**

   முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் கீழ் நிர்வாக குழுவினால் முகாமைத்துவம் செய்யப்படுகின்ற கதிர்காம முதியோர் இல்லம் மற்றும் அபிவிருத்தி கேந்திரம் அபிவிருத்தி செய்வதற்காக ரூபா1.698 மில்லியன் பணம் செலவு செய்யப்பட்டுள்ளதுடன் முதியோர்கள் 40பேர்கள் அங்கு பாதுகாப்பாக தங்கியிருப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

9. **முதியோர்களை காக்கும் அர்ப்பணிப்பாளர் நிகழ்ச்சித்திட்டம்**

பங்களிப்பாளர்களின் நன்கொடையினால் 2013 ஆம் ஆண்டு ஒருவருக்கு மாதம் ஒன்றுக்காக ரூபா 250 வீதம் 73 முதியோர்களுக்கு தொடர்ச்சியாக பண உதவி வழங்க முடிந்துள்ளது.

10. **முதியோர்களுக்கான பராமரிப்புச் சபை**

வருடத்தினுள் சபைக் கூட்டங்கள் 46 நடாத்தப்பட்டுள்ளதடன் முதியோர்களிடம் இருந்து கிடைத்த முறைப்பாடுகள் 170 களுள் 133 முறைப்பாடுகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பராமரிப்பச் சபையின் நடவடிக்கைகளுக்காக 2013 ஆம் ஆண்டில் ரூபா 0.769 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.

11. **முதியோர்களுக்கான தேசிய சபை**

2013 ஆம் ஆண்டில் முதியோர்களுக்கான தேசிய சபைக் கூட்டங்கள் 12 நடாத்தப்பட்டுள்ளது. செலவு ரூபா 0.733 மில்லியானகும்.

2013 ஆம் ஆண்டிற்காக மூலதனம் மற்றும் மீண்டுவரும் செலவின் கீழ் ரூபா20 மில்லியன் நிதியம் ஒதக்கப்பட்டுள்ள போதிலும் கட்டுநிதியாக ரூபா 76 மில்லியனே கிடைக்கப் பெற்றிருந்தது. ஆகையினால் 2013 ஆம் ஆண்டு செயற்பாட்டுத் திட்டத்தின் பிரகாரம் எதிர்பார்த்தளவில் செயலாற்றுகையை அடையவது கடினமானது.

எவ்வாறாயினும் 2013 ஆம் ஆண்டிற்காக மீண்டும்வரும் செலவுக்காக கிடைத்த ரூபா81.50 மில்லியன் பணத்திலிருந்து ரூபா9.395 மில்லியன் முதியோர் நலன்புரி விடயங்களுக்காக நேரடியாக செலவு செய்யப்பட்டது.

**பி.கே.எஸ்.சுபோதினி**

பணிப்பாளர்

முதியோர்களுக்கான தேசிய செயலகம்

## 2013 ஆம் ஆண்டின் அபிவிருத்தி செயற்திறன்முதியோா் இல்லங்களைப் புதுப்பித்தலுக்காக நிதியுதவி வழங்கல்

| மாகாணம் | முதியோர் இல்லம் | கொடுப்பனவு செய்யப்பட்ட நிதி (ரூபா) |
|---|---|---|
| மொனராகலை | கதிர்காமம் சுற்றுலாவிடுதி | 1,254,673.75 |
| | கதிர்காமம் முதியோர் இல்லம் | 375,319.50 |
| ஹம்பாந்தோட்டை | சரண விழிப்புலனற்ற முதியோர் இல்லம் | 150,00.00 |
| இரத்தினபுரி | எல்லகொட சரண விழிப்புலனற்ற முதியோர் இல்லம் | 498,000.00 |
| | கலவான செவண முதியோர் இல்லம் | 1,000,000.00 |
| மட்டக்களப்பு | காத்தான்குடி முதியோர் இல்லம் | 100,000.00 |
| கண்டி | குறுளுபொத்த சரண முதியோர் இல்லம் | 96,438.18 |
| யாழ்ப்பாணம் | கைதடி முதியோர் இல்லம் | 416,175.66 |
| அனுராதபுரம் | சாலியபுர முதியோர் இல்லம் | 463,767.00 |
| கம்பகா | மீரிகம அரச முதியோர் இல்லம் | 164,934.00 |
| | மாலிகாதன்ன முதியோர் இல்லம் | 12,360.00 |
| அம்பாறை | உத்தலபுர முதியோர் இல்லம் | 499,800.00 |
| **மொத்தம்** | | **5,031,468.09** |

# நடமாடும் சேவைகள் மூலம் முதியோர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்ட விபரம் - 2013

| மாகாணம் | மாவட்டம் | அடையாள அட்டைகளின் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|
| மேல் | கொழும்பு | 243 | ரூ. 6075/- |
| | களுத்துறை | 366 | ரூ. 9150/- |
| | கம்பகா | 209 | ரூ. 7725/- |
| மத்திய | மாத்தளை | 1765 | ரூ. 44125/- |
| | நுவரெலியா | 764 | ரூ. 20730/- |
| தென் | கம்பாந்தோட்டை | 767 | ரூ. 19175/- |
| | மாத்தறை | 389 | ரூ. 9725/- |
| | காலி | 561 | ரூ. 14025/- |
| கீழ் | மட்டக்களப்பு | 238 | ரூ. 5950/- |
| வட மேல் | குருனாகல் | 2193 | ரூ. 56075/- |
| | புத்தளம் | 238 | ரூ. 5950/- |
| வட மத்திய | அனுராதபுரம் | 1078 | ரூ. 26950/- |
| | பொலன்னறுவை | 637 | ரூ. 15925/- |
| ஊவா | பதுளை | 3281 | ரூ. 89915/- |
| | மொனராகலை | 1602 | ரூ. 40150/- |
| சப்பிரகமுவ | கேகாலை | 738 | ரூ. 20950/- |
| | இரத்தினபுரி | 469 | ரூ. 11725/- |
| வட | மன்னார் | 110 | ரூ. 2750/- |
| **மொத்தம்** | | **15648** | **ரூ. 407,070** |

## கிராமிய முதியோர் சங்கங்களை அமைத்தல் மற்றும் நிதியுதவி வழங்கல் ரூ.5,000- 2013

| மாகாணம் | மாவட்டம் | ரூ 5000 உதவி பெற்ற குழுக்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| மேல் | களுத்துறை | 108 |
| | கொழும்பு | 106 |
| | கம்பஹா | 122 |
| மத்திய | கண்டி | 55 |
| | மாத்தளை | 34 |
| | நுவரெலியா | 30 |
| தெற்கு | காலி | 150 |
| | மாத்தறை | 79 |
| | அம்பாந்தோட்டை | 23 |
| வடக்கு | யாழ்ப்பாணம் | 36 |
| | வவுனியா | 06 |
| | கிளிநொச்சி | 05 |
| | மன்னார் | 02 |
| கிழக்கு | மட்டக்களப்பு | 49 |
| | அம்பாறை | 17 |
| | திருகோணமலை | 17 |
| வடமேல் | புத்தளம் | 86 |
| | குருநாகல் | 327 |
| சப்ரகமுவ | இரத்னபுரி | 40 |
| | கேகாலை | 65 |
| ஊவா | மோனராகலை | 21 |
| | பதுளை | 11 |
| வட மத்திய | அனுராதபுரம் | 109 |
| | பொலன்னறுவை | 59 |
| **மொத்தம்** | | **1557** |

## பிரதேச மட்ட முதியோர் சங்கங்களுக்கு ரூ.7,500/- நிதியுதவி வழங்கல்

| மாகாணம் | மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு |
|---|---|---|
| மேல் | களுத்துறை | 03 |
| | கொழும்பு | 02 |
| | கம்பகா | 01 |
| தெற்கு | காலி | 03 |
| | மாத்தறை | 04 |
| | அம்பாந்தோட்டை | 01 |
| சப்ரகமுவ | கேகாலை | 03 |
| வடமத்திய | அனுராதபுரம் | 02 |
| | பொலன்னறுவை | 02 |
| மத்திய | கண்டி | 01 |
| | மாத்தளை | 01 |
| ஊவா | மொனராகலை | 01 |
| | பதுளை | 01 |
| வடமேல் | குருனாகல் | 05 |
| | புத்தளம் | 02 |
| கீழ் | மட்டக்களப்பு | 01 |
| மொத்தம் | | 34 |

## நிதி உதவி வழங்கப்பட்ட பகல் நேரப் பராமரிப்பு நிலையங்கள் - 2013

| மாகாணம் | மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு நிதியுதவி வழங்குதல். | |
|---|---|---|---|---|
| | | | நிலையங்களின் எண்ணிக்கை | தொகை ரூபா. |
| மேல் | களுத்துறை | பாலின்தநுவர | 01 | 25,000 |
| தென் | காலி | நியாகம | 01 | 25,000 |
| | கம்பாந்தோட்டை | பெலிஅத்த | 01 | 25,000 |
| வடமேல் | குருனாகல் | பொலிபித்திகம | 01 | 25,000 |
| | | மகவ | 01 | 25,000 |
| | | குளியாப்பிட்டிய மேற்கு | 01 | 25,000 |
| | | குருனாகல் | 01 | 25,000 |
| | | உடுபத்தாவ | 02 | 50,000 |
| | கேகாலை | கலிகமுவ | 01 | 25,000 |
| | இரத்தினபுரி | இரத்தினபுரி | 02 | 50,000 |
| மத்திய | கண்டி | உடுனுவர | 01 | 25,000 |
| | | மததும்பர | 01 | 25,000 |
| | நுவரெலியா | அம்பகமுவ கோறளை | 05 | 125,000 |
| ஊவா | பதுளை | கப்புத்தளை | 09 | 225,000 |
| | அம்பாறை | தமன | 01 | 25,000 |
| கீழ் | திருகோணமலை | கிண்ணியா | 01 | 25,000 |
| | | கந்தளாய் | 01 | 25,000 |
| **மொத்தம்** | | | **31** | **775,000** |

## ஓய்வு பெற இருப்பவர்களுக்கான நிகழ்ச்சி- 2013

| நடாத்தப்பட்ட இடம் | செயலமவர்வுகளின் எண்ணிக்கை | பயனாளிகள் | தொகை(ரூ) |
|---|---|---|---|
| கொப்பேகடுவ, கமநலவிடயங்கள் மற்றும் பயிற்சி ஆராய்ச்சி நிறுவனம் | 01 | 150 | ரூபா. 301134 |
| இரத்தினபுரி மாவட்ட செயலகம் | 01 | 175 | ரூபா. 110000 |
| **மொத்தம்** | **02** | 325 | **ரூபா. 411,134** |

# முதியோருக்கான குடும்ப உறைவிட நலனோம்பல் சேவை - பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்

முதியோர்களுக்கு தேவைப்படுகின்ற பாதுகாப்பு மற்றும் தாதி நலச்சேவை வழங்கும் நோக்கில் முதியோர்களைப் பாதுகாக்கும் தொண்டர் ஊழியர்களுக்கு பயிற்சியளித்து, சேவையில் ஈடுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டம் ஒன்று முதியோர்களுக்கான தேசிய செயலகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் தேர்ந்தெடுக்கப்பட்ட 135 பேர்களுக்கு முதியோர்களை பாதுகாத்து கவனித்துக்கொள்ளும் மற்றும் அவர்களின் சுகாதாரரீதியான சேவைகள் வழங்கல் தொடர்பான மூன்று வாரங்களைக் கொண்ட முறையான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இது வரையில் குறிப்பாக மேல் மாகாணத்தினுள் வாழுகின்ற தேவையுடைய முதியோர்களுக்கு அவர்களின் சேவையை பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு பகல் நேரத்தில் 08 மணித்தியாலங்களைக்கொண்ட காலப்பகுதிக்காக தலா ரூபா 600 வீதம் கட்டணமமாக அறவிடப்படுகிறது.

முதியோருக்கான தேசிய செயலகத்தின் முழுமையான மேற்பார்வையின் கீழ் சேவை வழங்கப்படுவதுடன்சேவை பெற்றுக்கொள்பவரின் தேவைக்கமைய ஆண் பெண் என பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறே சேவையில் ஈடுபடும் சகல நலச் சேவைகளும் மரியாதையாகவும் ஒழுக்கமாகவும் வழங்கப்படும்.

சமூக சேவைகள் அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு ஒன்றிணைந்து பயிற்சிகளை திட்டமிட்டு செயற்படுத்துவதுடன் பயிற்சிகளை திறம்பட பூர்த்திசெய்கின்றவர்களுக்கு முறையான சான்றிதழும் அடையாள அட்டையும் வழங்கப்படுகிறது. ஆகையினால் மிகவும் நம்பிக்கையுடன் அந்த பாதுகாப்பு நலச் சேவைகளை அந்த தொண்டர் ஊழியர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

இந்த செயற்றிட்டம் முதியோர்களுக்கும் அவர்களின் குடும்பத்தாருக்கும் மட்டுமல்ல ஏனையவர்களுக்கும் அரச அங்கீகாரமுடைய பயிற்சிகளின் பின்னர் பெருமதியான சான்றிதழ் பெறமுடியும். அவ்வாறு பெற்று தொண்டர் ஊழியராக சேவை புரிந்து வருமானமும் பெற்றுக்கொள்ள முடியும்.

தற்சமயம் மேல் மாகாணத்தை மையப்படுத்திக்கொண்டுள்ள இந்த முதியோர் கவனிப்பு தொண்டர் சேவை எதிர்காலத்தில் ஏனைய மாகாணங்களுக்கும் விரிவுபடுத்தி பரந்தளவில் சேவை வழங்க எதிர்பார்க்கின்றோம்.

# முதியோர் தாபரிப்புத் திட்டம்

முதியோர்களுக்கான தேசிய சபையின் பிரேரணையின் பிரகாரம் மிகவும் உதவியற்ற வறிய நிலையிலுள்ள 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்கு உதவும் நோக்கில் இந்த முதியோர்களை காக்கும் அர்ப்பணிப்பாளர் நிகழ்ச்சித்திட்டம் முதியோர்களுக்கான தேசிய செயலகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு எந்தவொரு நபருக்கும் பணம் நன்கொடையாக வழங்க முடியும் என்பதுடன் அவ்வாறு நன்கொடையாளர் மூலம் வழங்கப்படுகின்ற பணம் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் மிகவும் வறிய உதவியற்ற முதியோர்களுக்காக மாதம் ஒன்றுக்கு ரூபா 250 வீதம் வழங்கப்படுகிறது. பயனாளிகளுக்குப் பணம் வழங்கப்படும் போது 04 மாதங்களுக்கு ஒரு முறை ஒரு பயனாளிக்குரூபா 1000 வீதம் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வழங்கப்படுகிறது. பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பயனாளியிடம் பணம் ஒப்படைக்கப்படும்.

பிரதேச செயலாளர் அலுவலகத்திலுள்ள எமது உத்தியோகத்தர் (முதியோர்களின் உரிமையை மேம்படுத்தும் உதவி உத்தியோகத்தர்.∴சமூக சேவை உத்தியோகத்தர்) ஒவ்வவொரு மூன்று மாதங்களுக்கும் ஒரு முறை பயனாளிகள் பற்றிய தகவல்கள் ஆராயப்படுவதுடன் பயனாளிகளுக்குப் பணம் வழங்கும் போது பணம் வழங்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நன்கொடையாளர்களுக்கு அறிவிக்கப்படும்.

அவ்வாறு இந்த நிகழ்சித்திட்டத்தின் கீழ் உதவி வழங்கும் போது விருப்பமான ஒருவரை அல்லது சிலரை அல்லது தாம் விரும்பும் பிரதேசத்திலுள்ள ஒருவரை அல்லது சிலரை நன்கொடையாளர்களினால் தேர்ந்தெடுக்க முடியும். அவ்வாறு இல்லையென்றால்அந்த தேர்வு இந்த அலுவலகத்தின் மூலம் செய்யப்படுவதுடன் பயனாளியின் பெயர், விலாசம், உள்ளடங்கும் தகவல்கள் நன்கொடையாளருக்கு வழங்குவதற்கு எமது அலுவலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக பங்களிப்பு வழங்க விரும்பும் நபருக்கு பத்தரமுல்லை, இலங்கை வங்கிக் கிளையில் இல. 5234881 ஐ கொண்ட முதியோர்களை காக்கும் அர்ப்பணிப்பாளர் நிகழ்ச்சித்திட்டக் கணக்கிற்கு உங்கள் நன்கொடைகளை வைப்பிலிட முடியும் என்பதுடன் அவ்வாறு வைப்பிலிடும் பொழுது பணம் வைப்பிலிட்ட பற்றுச்சீட்டின் பிரதியொன்றை எமக்கு வழங்க வேண்டும். அவ்வாறு இல்லையென்றால் எமது அலுவலகத்திற்கு நேரில் வந்து உங்களின் பணத்தை வழங்க முடியும்.

இந்த நிகழ்ச்சித் திட்டம் உதவியற்ற முதியோர்களுக்காக செய்யப்படும் மிகப்பெரும் தர்மமாகும். ஆகையினால் அதை மெம்மேலும் விரிவுபடுத்தி முதியோர்கள் பலருக்கு இந்த நிகழ்ச்சியின் மூலம் சேவைகளை வழங்க எதிர்பார்க்கின்றோம்.

அதன் பிரகாரம் 2013 ஆம் ஆண்டின்போது முதியோர்களை காக்கும் அர்ப்பணிப்பாளர் நிகழ்ச்சியின் நன்கொடையாளர்கள்,பயனாளிகள் மற்றும் குறித்த பிரதேச செயலகப் பிரிவுகள் கீழே தரப்பட்டுள்ளது.

| இல | பங்களிப்பாளரின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை | பயனாளிகளின் பெயர் | பிரதேச செயலகம் |
|---|---|---|---|---|
| 1 | திருமதி.டபிள்யு.யமுனா சித்திராங்கனி | 11 | அய்.சீ.மெலின் பர்னாந்து | இப்பாகமுவ |
| | | | திருமதி.ஆர்வை.ஜி.குணவதி | கலகெதர |
| | | | திருமதி.ஜயவத்தி | புளஞ்சிங்கள |
| | | | ஏ.சீ.கமலாவத்தி | புளஞ்சிங்கள |
| | | | டபிள்யு.பீ.லீலாவதி | திஸ்ஸமகாராமய |
| | | | டி.பீ.ஜோன் நோனா | ரிதிகம |
| | | | திரு.வின்.பர்னாந்து | பாணந்துறை |
| | | | திரு.ஏ.ஜி.தர்மவர்த்தன | தெரணியாகல |
| | | | ஏ.டபிள்யு.மெகிலின் ருத்ரிகோ | மாஸ்பொத |
| | | | ஜீ.தெரேஸா டிலெக் | களனி |
| | | | எம்.ஜி.டிங்கிரியம்மன் | குண்டகசாலை மெனிக்கின்ன |
| 2 | திரு.ஆனந்த திலாகசிரி | 10 | எம்.ஏ.ஞானவத்தி | செவனகல |
| | | | ஆர்.எம்.டிங்கினா | செவனகல |
| | | | எம்.பீ.அனகி | மினுவன்கொட |
| | | | யூ.ஜி.டிங்கிரிமெனிகே | உடுகம்பல |
| | | | ஏ.டபிள்யு.வி.பேபினோனா | தெவிநுவர |
| | | | எம்.வி.பியசேன | தெவிநுவர |
| | | | ஏ.டபிள்யு.பி.குசுமாவதி | தெவிநுவர |
| | | | தம்பிமுத்து இலேதம்பி | சம்மந்துறை |
| | | | எம்.அபுரன் முடியப்பு | டெல்பி |
| | | | எம்.பி.லிலி | களனி |
| 3 | திரு.எட்வேட் பெரேரா | 08 | டி.ஜி.பி.எம்.ரங்தோஹாமி | பண்டுவஸ்நுவர பரகிரி |
| | | | கே.எம்.ரங்தோஹாமி | பண்டுவஸ்நுவர பரகிரி |
| | | | ஜெ.ஏ.வினிபிரிடாபெரேரா | களுத்துறை |
| | | | பி.ஏ.பியசேன | அலுவலகத்திற்கு வந்து பணம் பெறப்பட்டது. |
| | | | டீ.பீ.தனோர்ஸ் | செவனகல |
| | | | ஈ.டீ.டெலின்சிங்ஞோ | செவனகல |
| | | | எஸ்.ஹரதலி | கொலன்ன |
| | | | ஈ.எம்.பண்டார மெனிக்கே | மாவத்கம |
| 4 | திருமதி.ஏ.பீ.பெரேரா | 01 | எம்.ஜி.சேதன் விந்நோ | நிட்டப்புவ |
| 5 | திரு.ஜே.ஏ.டி.லெனாட் ரோஹன | 01 | ஜெ.ஏ.டி.எமிலின்நோநா | பியகம |
| 6 | திருமதி.சோமாகுலதுங்க | 03 | ஏ.அந்தனி | ஶ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டை |
| | | | திரு.ஈ.வயலட்நோனா | ஶ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டை |
| | | | திரு.கே.ஏ.பொடிஹாமினே | ஶ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டை |
| 7 | ஜயந்த புன்சிஹேவா | | திருமதி.கே.மேரிநோனா | கெஸ்பேவ |
| 8 | லலனி பெரேரா | 02 | கே.எம். பண்டார மனிக்கே | பதனஹேவா வொட |
| | | | திருமதி. டபிள்யு. தினுகாமி | பொல்பிதிகம |
| 9 | எஸ்.பிரசங்கிகா சில்வா | 01 | திரு.எம்.எம் அபேரத்ன | தம்புத்தேகம |

| | | | | |
|---|---|---|---|---|
| **10** | எம்.எஸ்.ஏ.ஹின்டிட் | 08 | ஜி.ஆர்.சாதிநோனா | வறகாபொல |
| | | | அய்.ஜி.சொய்தா | வறகாபொல |
| | | | எச்.பி.பொடிநோனா | வறகாபொல |
| | | | டபி.எச்.லிலியா | வறகாபொல |
| | | | ஜே.ஏ.லெய்சா | வறகாபொல |
| | | | ஏ.சிமட்யோன் | வறகாபொல |
| | | | ஏ.அமரசிரி தசில்வா | நீர்கொழும்பு |
| | | | ஜே.எம்.எட்ன்ட் | நீர்கொழும்பு |
| **11** | என்.ஏ.பர்னாந்து | 06 | எம்.பீற்றர் பெரேரா | மகரகம |
| | | | ஆர்.ஏ.குசுமாவத்தி | மகரகம |
| | | | ஏ.ஹேமபால | மகரகம |
| | | | டபி.டி.தர்மதாச | மகரகம |
| | | | ஏ.விக்கடர் | மகரகம |
| | | | கே.பி.அசிலின்நோனா | மகரகம |
| **12** | திரு. டி.தமித்தேகம | 04 | எம்.டி.லீலாவத்தி | மககும்புக்கடவல |
| | | | ஆர்.டி.பினீ | கிரிபாவ |
| | | | எம்.எச்.ஹாமிநோனா | கிரிபாவ |
| | | | ஆர்.எம்.ஞானலதா | பொல்கஹவெல |
| **13** | திருமதி. ஆர்.எம்.குசுமா குமரிஹாமி | 01 | ஏ.சுமனாவத்தி | மிஹிந்தளை |
| **14** | திருமதி. டபி.எம்.வத்சலா | 01 | ஜி.அய்பத்திகெதர | வத்தேகம |
| **15** | திருமதி. ஏ.எம்.ஆர்.ஏ.ஜயசுந்தர | 01 | ஆர்.அகீநோனா | கடுவெல |
| **16** | நந்தா கருனாசேன | 01 | எல்.ஏ.ஹீன்ஹாமி | களனி |
| **17** | திருமதி. சுனில் பெரேரா | 01 | அய்.தோன அக்னஸ் | களனி |
| **18** | தரங்கா கருனாசேன | 01 | அய்.என்சிநோனா | களனி |
| **19** | எம்.பி.குனதாச, எம்.டி.அய்.யு.குனதாச | 02 | ஏ.சோமா குனவர்தன | மினுவன்கொட |
| | | | எம்.பீ.விஜபுலசேன | மினுவன்கொட |
| **20** | கே.பி.நிசாந்த | 01 | எம்.பி.எசிலின்நோனா | தெம்போ |
| **21** | எம்.எஸ்.எம்.அஸ்ரொப் | 01 | அப்துல் ரிஸ்வான் | களுத்துறை |
| **22** | சீலா பியசிங்க | 01 | எச்.எம்.ஹேரத் மெனிகே | இப்பாகமுவ |
| **23** | இந்திரானி செனவிரத்ன | 01 | யசவத்தி வெத்தசிங்க | மகரகம |
| **24** | திலுபா கரனாரத்ன | 01 | நேபட் விமலரத்ன | பிலியந்தல |
| **25** | விநிதா மல்லிகா | 01 | பீ.ஏ.சுமனா பெரேரா | திம்பிரிகஸ்யாய |
| **26** | டி.பீ.விக்கிரமாரச்சி | 01 | திரு. எம். துசித ரத்ன சில்வா | மலபிட்டிய |
| **27** | ஹவீந்திர கல்தேரா | 02 | எச்.பி.பித்சோஹாமி<br>டபி.பீ.குனவத்தி | மாலிம்பட<br>குன்டசாலை |

# கதிர்காம யாத்திரை விடுதியின் வருமானம் மற்றும் செலவுத் தகவல் - 2013

| மாதம் | அறைகள் ஒதுக்கப்பட்ட தொகை | வருமானம் ரூபா. | செலவுகள் | | | பிற |
|---|---|---|---|---|---|---|
| | | | நீர்ப் பட்டியல் ரூபா. | மின்சாரப் பட்டியல் ரூபா. | சுத்தஞ் செய்தல் ரூபா. | |
| ஜனவரி | 14 | 16,000.00 | 6832.00 | 2,092.50 | 15,500.00 | - |
| பெப்ரவரி | 35 (கு.ா்.உடன்) | 24,300.00 | 14.576.80 | 1,653.75 | 15,892.85 | - |
| மார்ச் | 15 | 11,800.00 | 6,328.00 | 1,088.26 | 16,500.00 | - |
| | 3 | 2.100.00 | | | | |
| ஏப்ரல் | 23 | 24,700.00 | 4,172.00 | 2,799.38 | 16,500.00 | - |
| மே | 30 | 26,200.00 | 9,016.00 | 1,336.88 | 16,500.00 | 275,045.00 |
| யூன் | 11 | 10,600.00 | 8,260.00 | 1,215.01 | 16,500.00 | |
| யூலை | 08 | 6,400.00 | 6,832.00 | 1,093.13 | 16,500.00 | |
| ஆகஸ்டு | 55 | 55,000.00 | 8,176.00 | 2,604.38 | 16,500.00 | |
| செப்ரெம்பர் | 32 | 37,400.00 | 12,728.80 | 4,627.50 | 16,500.00 | |
| ஒக்டோபர் | 27 | 26,200.00 | 6,412.00 | 3,384.38 | 16,500.00 | |
| நவம்பர் | 47 | 21,700.00 | 9,520.00 | 2,458.13 | 16,500.00 | 375,319.50 |
| திசம்பர் | 56 | 47,100.00 | 16,256.80 | 2,896.88 | 16,500.00 | 715,465.00 |
| | **மொத்தம்** | **310,100.00** | **109,110.40** | **27,250.18** | **196,392.85** | **1,365,829.50** |

# சிரேஸ்ட பிரஜைகளுக்கான ஓய்வூதியத் திட்டம்

சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சின் மேற்பார்வையின் கீழ் 2007 ஆம் ஆண்டு சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு முதியோர்களுக்கான தேசிய செயலகம் மற்றும் இலங்கை சமூக பாதுகாப்பு சபை ஒன்றிணைந்து இந்த ஓய்வூதியச் சம்பளத் திட்டத்தை அமுற்படுத்த தீர்மானித்ததுடன் அது 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் அமுற்படுத்தப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 70 வயதுக்குக் கூடிய தமது பிள்ளைகளாலும் உறவுகளாலும் கவனிக்கப்படாதுள்ள, அரச ஓய்வூதியச் சம்பளம், விதவைச் சம்பளம், ஊழியர் சேமலாபம நிதியம், விவசாய மீன்பிடி அல்லது சுயதொழில் ஓய்வூதியங்கள் அல்லது வேறு வகையிலான சமூக காப்புறுதித் திட்ட பங்களிப்பு பணம் கிடைக்கப்படாத மிகவும் உதவியற்ற நபர்களை இதில் சேர்த்துக்கொள்ளப்படும். அத்துடன் நீண்டகாலமாக நோய்வாய்ப்பட்டுள்ள,அங்கவீனமுற்றோர்கள் இதில் முன்னுரிமை பெறுகின்றனர்.

இந்த ஓய்வூதியச் சம்பளத்திட்டத்திற்கு தேவையான நிதியாக ரூபா03 மில்லியன் நிதி சுப்பிரி வாசனா லொத்தர் நிதியத்தால்  வழங்கப்பட்டுள்ளதுடன் இலங்கை சமூக பாதுகாப்பு சபையினால் அந்தப் பணம் முதலீடு செய்யப்பட்டு மாதாந்தம் ஓய்வூதியச் சம்பளங்களாக செலுத்தப்படுகிறது.

தகைமையுடைய சிரேஸ்ட பிரஜைகளுக்காக மாதாந்தம் ரூபா 500 வீதம் 89 பயனாளிகளுக்கு இந்த நன்மைகள் வழங்கப்பட்டுள்ளன.

# முதியோர்களுக்கான பராமரிப்பு சபை

2000 ஆம் ஆண்டு இலக்கம் 09 ஐ கொண்ட முதியோர்களின் உரிமைகளை பாதுகாக்கும் சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள முதியோர்களுக்கான பராமரிப்புச் சபையானது நீதிமன்றச் சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற தலைவர் உட்பட உறுப்பினர்கள் ஐந்து பேர்களைக் கொண்டதாகும். இதன் தற்போதைய தலைவர் ஓய்வூபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதியாகும்.

இதன் பணியாவது, பிள்ளைகள் மூலம் கவனிக்கப்படாத, 60 வயதுக்கு மேற்பட்ட வயோதிப பெற்றோர்களுக்கு அந்த கவனிக்காத பிள்ளைகளிடம் இருந்து வாழ்வதற்கு ஏதும் பராமரிப்பு பணம் பெற்றுக்கொடுப்பதாகும். அதன்பிரகாரம் இந்த பிள்ளைகள் மூலம் முதியோர்களின் உரிமைகளை பாதுகாக்கும் சட்டத்தின் பிரகாரம் இரண்டு தரப்பினர்களையும் அழைத்து விசாரிக்கப்படுகிறது. பெற்றோர்களின் வருமானம் மற்றும் தங்கியிருப்பதற்கான தேவை ஆகியவை கவனத்தில் கொள்ளப்படுகிறது.

இங்கு பெற்றோர்களுக்கு பராமரிப்பு பணம் கோரப்படும் பொழுது தமது பிள்ளைகளிடத்திலும் தமது வளர்ப்பு பிள்ளைகளாக வளர்த்த பிள்ளைகளிடத்திலும் (யுனழிவநன ஊாடைன) பராமரிப்பு பணம் கோர முடியும். மேலும் ஏதேனும் பெற்றோரின் வயது 60 க்குகறைவாக இருக்கும் நிலையில் அவர்களின் அன்றாட பராமரிப்புக்களை செய்துகொள்ள முடியாத உடல் அங்கவீனமுற்றவர்களுக்கும் இந்தச் சட்டத்தின் 25 (ஐஏ) ஆம் பிரிவின் கீழ் பராமரிப்பு பணம் கோர முடியும்.

முதியோர்களுக்கான பராமரிப்புச் சபையிடம் கோரிக்கை விடுப்பதற்குத் தேவையான விண்ணப்பம் பிரதேசத்தின் கிராம சேவை உத்தியோகத்தரிடமும் பிரதேச செயலாளர் அலுவலகத்திடம் இருந்து பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் முதியோர்களுக்கான தேசிய செயலகத்தினால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் இந்த சபைக்கு குடும்ப பிணக்குகள், காணிப் பிணக்குகள் அல்லது சொத்து சம்பந்தமாக குடும்பங்களுக்கிடையிலுள்ள பிணக்குகள் போன்றவைகளை தீர்த்து வைக்கும் அதிகாரம் இந்தச் சட்டத்தின் கீழ் இல்லை.

இந்த பராமரிப்புச் சபையினால் வழங்கப்படுகின்ற ஏதேனும் பராமரிப்புப் பணம் செலுத்துதல் சம்பந்தமான உத்தரவு ஒன்றை ஏதும் பிள்ளையினால் செய்யாதிருக்கும்போது சட்டத்தின் 32 ஆவது பிரிவின் பிரகாரம் சபைக்கு அந்த தீர்மானத்தை அமுறப்படுத்துவதற்காக நீதவான் நீதிமன்றத்திற்கு சாட்ட முடியும். அதன்போது நீதவானுக்கு அந்த உத்தரவை பராமரிப்பு கட்டளைச் சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட கட்டளையொன்றை செயற்படுத்தும் விதத்தில் அமுறப்படுத்தும் அதிகாரம் உண்டு.

# முதியோர்களுக்கான பராமரிப்பு சபை - 2013

| | | |
|---|---|---|
| 2013 வருடத்தின் கிடைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள் | - | 181 |
| போதுமான விபரம் கிடைக்கப்படாத முறைப்பாடுகள் | - | 07 |
| காணிப் பிணக்கு போன்ற தொடர்பற்ற முறைப்பாடுகள் | - | 70 |
| அதன்டி இறுதிவரை விசாரிக்கப்பட்ட முறைப்பாடுகள் | | 104 |

| | | |
|---|---|---|
| சபையினால் தீர்த்துவைக்கப்பட்ட முறைப்பாடுகள் | - 48 | 104 |
| பல காரணங்களினால் நிராகரிக்கப்பட்டதும் இடமளிக்க முடியாத முறைப்பாடுகள் | - 23 | |
| வாபஸ்பெற்றுள்ள முறைப்பாடுகள் | - 08 | |
| தற்சமயம் விசாரிக்கப்பட்ட வண்ணமுள்ள முறைப்பாடுகள் | - 25 | |

## முதியோர்களுக்கான பராமரிப்புச் சபை உறுப்பினர்கள்

தலைவர் - திரு.டபிள்யு.கருனாரத்ன

செயலாளர் - திரு. எம்.ஜீ. புஞ்சிபண்டா

**சபையின் உறுப்பினர்கள்**

1. திரு. கசலி ராஜபக்ஸ
2. திரு. கலாநிதி லீல் குணசேகர
3. திரு. கே. மார்க்கண்டு
4. திரு. ஏ.ஆர்.ஏ.எம். லாபீர்

# முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின்கணக்குக் கொள்கை

## பொதுவான கணக்குக் கொள்கை

அ) இந்த நிறுவனமானது நிதிக் கூற்றினை தயாரிப்பது தொடர்பில் கணக்கீட்டுக் கொள்கை மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமனம் போன்றவற்றினைப் பின்பற்றுகின்றது.

## ஆ) அரச கொடைகள்

முதியோர்களுக்கான தேசிய செயலகம் வருமானம் கிடைக்கப் பெறுகின்ற நிறுவனமல்ல. இது திறைசேரியில் இருந்தே நிதியினைப் பெற்று இயங்கி வருகின்றது.

திறைசேரியின் மூலம் கிடைக்கப் பெறும் பணத்தில் மீண்டு வரும் செலவினங்களாக எடுத்துக் கொள்ளப்படும் பணம் வருமானம் மற்றும் செலவினக் கணக்கிலும், மூலதனச் செலவானது அரச மூலதனக் கொடையில் பிரதிபலிக்கப்படுகின்றது.

## நிலையான சொத்துக்கள் மீதான பெறுமானத் தேய்வு

**அ)**பெறுமானத் தேய்வுக் கொள்கை

I. நிலையான சொத்துக்கள் மீதான பெறுமானத்தேய்வுக் கொள்கையானது கொள்வனவு செய்யப்படும் ஆண்டில் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டு அகற்றப்படும் ஆண்டில் பெறுமானத் தேய்வு செய்யப்படுவதில்லை.

II. கீழ்வரும் நிலையான சொத்துக்களுக்கு நேர் கோட்டு முறையில்பறுமானத் தேய்வு கணிப்பிடப்படும்.

| | | |
|---|---|---|
| வாகனம் | - | 10மூ |
| தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்கள் | - | 15மூ |
| இயந்திரங்கள் மற்றும் பொருத்தல்கள் | - | 20மூ |

ஆ) மூலதனச் செலவினம் மற்றும் மீண்டெழும் செலவினம்நிதி பெற்றுக் கொள்வது தொடர்பான அறிக்கைகள் உள்ளக்கப்பட்டுள்ளன.

இ) நிலையான சொத்துக்களின் கீழ்க் காட்டப்பட்டுள்ள (தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள்) சொத்துக்களில் சில பிரதேச செயலக மட்டத்தில் பேணப்பட்டு வருகின்றன.

பின்னிணைப்பு –1எ

# முதியோர்களுக்கான தேசிய செயலகம்

## 2013 மார்கழி 31ம் திகதிய நிதி நிலபரக் கூற்று

| 2013 | விபரம் | குறிப்பு | ஆகுசெலவு 2013 (ரூபா) | தேய்மானம் தொடர்பான ஏற்பாடு(ரூபா) | 2013 (ரூபா) தேறிய பெறுமதி |
|---|---|---|---|---|---|
| | **நிலையான சொத்துக்கள்** | | | | |
| 2,004,902.94 | தளபாடங்களும் மற்றும் அலுவலக உபகரணங்களும் | | 12,745,759.19 | 7,114,398.56 | 5,631,360.63 |
| 14,145,000.00 | வாகனங்கள் | | 16,550,000.00 | 4,060,000.00 | 12,490,000.00 |
| 577,404.80 | எந்திரங்களும் மற்றும் பொருத்துதல்களும் | | 3,969,075.40 | 2,385,459.88 | 1,583,615.52 |
| | | | 33,264,834.59 | 13,559,858.44 | 19,704,976.15 |
| 16,727,307.74 | முதலீடு - நிலையான வைப்புக்கள் | | | | 5,871,795.65 |
| 5,219,373.90 | **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| 442,107.84 | சரக்குப் பொருட்கள் | **10** | 610,411.26 | | |
| 1,000.00 | மீள்நிரப்பப்படாத முற்பணம் | | - | | |
| 62,500.00 | மீள் நிரப்பப்படாத பண்டிகை முற்பணம் | 11 | 60,000.00 | | |
| 32,597.48 | மீள் நிரப்பப்படாத இடர் முற்பணம் | | - | | |
| 3,257,884.00 | அலுவலகக் குழாமுக்கான கடன் | 12 | 3,521,896.00 | | |
| 943,849.56 | நிதி மற்றும் நிதிசார் பாய்ச்சல் | 8 | 697,839.40 | 4,890,146.66 | |
| **26,686,620.52** | **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| | **பொறுப்புக்கள்** | | | | |
| | **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | |
| 50,000.00 | கணக்காய்வுக் கட்டணங்களை ஒதுக்குதல். | | 100,000.00 | | |
| 5,854,110.50 | பணிக்கொடையினை ஒதுக்குதல் | 13 | 7,381,809.00 | | |
| 130,455.72 | அலுவலகக் குழாமுக்கான கடன் நிதியம் | 14 | 276,922.77 | | |
| 1,519,310.53 | பொது வைப்புக்கள் | 15 | 4,319,359.33 | | |
| 9,527,771.61 | திரண்ட செலவுகள் | 9 | 7,666,529.16 | | |
| | மீளவும் வழங்கப்பட வேண்டிய ஊழியர் கடன் | | 520.00 | | |
| | **தேறிய நடைமுறைச் சொத்துக்கள்** | | | 19,745,140.26 | (14,854,993.60) |
| 26,686,620.52 | **மொத்தச் சொத்துக்கள்** | | | | 10,721,778.20 |
| | தேறிய சொத்துக்கள் | | | 40,320.88 | |
| 16,175,474.46 | திரண்ட நிதியம் | | | | |
| (4,403,.098.82) | கூட்டுதல் - கடந்த வருட இணக்கம் | | (1,000.00) | | |
| 11,772,375.64 | | | | 39,320.88 | |
| (12,176,526.22) | கூட்டு/கழி தேறிய மேலதிகம் | | | (8,737,765.71) | (8,698,444.83) |
| | அரச வழங்கல்கள் (மூலதனம்) | | | | 9,200,000.00 |
| | நிலையான வைப்புக்களின் வட்டி | | | | 652,421.75 |
| | திறைசேரியின் வழங்கல்கள் (வாகனங்கள்) | | | 9,100,000.00 | 9,100,000.00 |
| | உலக சுகாதார அமைப்பின் நன்கொடை | 16 | | 104,613.52 | 104,613.52 |
| 360,037.76 | பெற்றோர் தாபரிப்புத் திட்டம் | 17 | | | 363,187.76 |
| **9,604,972.16** | மொத்தத் தேறிய சொத்துக்கள் | | | | **10,721,778.20** |

**ஒப்பம்**

**இமெல்டா சுகுமார்**
தலைவர்
முதியோர்களுக்கான தேசிய சபை.

**ஒப்பம்**

பி.கே.எஸ்.சுபோதினி
பணிப்பாளர் (பதில்)
முதியோர்களுக்கான தேசியசெயலகம்

பின்னிணைப்பு – 1 பி

# முதியோர்களுக்கான தேசிய செயலகம்

## 2013 மார்கழி 31 ம் திகதிய நிதி செயற்திறன் கூற்று

| 2012 | விபரம் | குறிப்பு | 2013 (ரூபா) | 2013 (ரூபா) |
|---|---|---|---|---|
| | **செயற்பாட்டு வருமானம்** | | | |
| 65,345,528.54 | அரச வழங்கல்கள் | | 70,830,000.00 | |
| 182,379,000.00 | அமைச்சு வழங்கல்கள் | | - | |
| 1,401,166.48 | உலக சுகாதார அமைப்பு | | - | 70,830,000.00 |
| | **பிற வருமானம்** | | | |
| 408,890.97 | நிலையான வைப்புக்களின் வட்டி | | - | |
| 900.00 | நன்கொடை | | - | |
| 772,051.96 | பல்வேறு வருமானம் | | 402,005.69 | 402,005.69 |
| 250,307,537.95 | | | | 71,232,005.69 |
| | **செயற்பாட்டுச் செலவுகள்** | | | |
| 36,167,278.59 | ஆளுக்குரிய வேதனாதிகள் | | 38,909,046.78 | |
| 1,831,102,12 | பிரயாணச் செலவுகள் | | 628,279.99 | |
| 1,841,905.30 | வழங்கல்கள் மற்றும் அலுவலகத் தேவைப்பாடுகள். | | 735,667.97 | |
| 376,009.88 | பராமரிப்புச் செலவுகள் | | 533,226.30 | |
| 7,762,773.43 | ஒப்பந்தச் சேவைகள் | | 5,053,370.96 | |
| 211,713,759.87 | ஏனைய செயற்பாட்டுச் செலவுகள் | | 30,458,670.69 | |
| 2,791,234.98 | தேய்மானத்தின் அளவு | | 3,651,508.71 | |
| **262,484,064.17** | **மொத்த செயற்பாட்டுச் செலவுகள்** | | | 79,969,771.40 |
| **(12,176,526.22)** | **குறிப்பிட்ட காலத்திற்கான தேறிய பற்றாக்குறை** | | | **(8,737,765.710)** |

**ஒப்பம்**

**இமெல்டா சுகுமார்**
தலைவர்
முதியோர்களுக்கான தேசிய சபை.

.

**ஒப்பம்**

**பி.கே.எஸ்.சுபோதினி**
பணிப்பாளர் (பதில்)
முதியோர்களுக்கான தேசியசெயலகம்

பின்னிணைப்பு – 1 சீ

முதியோர்களுக்கான தேசிய செயலகம்

# 2013 டிசம்பர் 31 திகதிய நிதிப்பாய்ச்சல் கூற்று

| விபரம் | 2013<br>ரூபா | 2013<br>ரூபா |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளினூடாக நிதியப் பாய்ச்சல்.** | | |
| செயற்பாட்டு நடவடிக்கைகள் மேலதிகம்/பற்றாக்குறை | (8,737,765.71) | |
| **நிதிசாரற்ற செயற்பாடுகள்** | | |
| தேய்மானம் | 3,651,508.71 | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | |
| வருட இறுதியில் இருப்பு அதிகரிப்பு | (168,303.42) | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | |
| பணிக்கொடை | 1,527,698.50 | |
| ஊழியர் கடன் இனிவருங் காலத்தில் அதிகரித்தல். | (264,012.00) | |
| மீள் நிரப்பப்படாத இடர் கடன் முற்பணம் குறைதல் | 32,597.48 | |
| மீள் நிரப்பப்படாத பண்டிகை முற்பணம் குறைதல் | 1,500.00 | |
| நிலையான சொத்துக்களின் வட்டி அதிகரிப்பு | (652,421.75) | |
| மீள் நிரப்பப்படாத முற்பணம் குறைதல் | 1,000.00 | |
| கணக்காய்வுக் கட்டணங்களை ஒதுக்குதல் அதிகரிப்பு | 50,000.00 | |
| ஊழியர் கடன் நிதியம் அதிகரிப்பு | 146,467.05 | |
| பொது வைப்புக்களில் அதிகரிப்பு | 2,800,048.80 | |
| திரண்ட செலவுகளில் குறைவு | (1,861,242.45) | |
| மீளவும் வழங்கப்பட வேண்டிய ஊழியர் கடன் அதிகரிப்பு | 520.00 | |
| கடந்த வருடத்தின் சீராக்கல்கள் | - | |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளினூடாகத் தேறிய காசுப்பாய்ச்சல்.** | | **(3,472,404.79)** |
| **முதலீட்டு நடவடிக்கைகளினூடாக தேறிய காசுப் பாய்ச்சல்** | | |
| நிலையான சொத்து தேறிய வட்டிகள் | 652,421.75 | |
| சொத்துக்கள், எந்திப்பொறிகள் மற்றும் பொருத்துதல்களைக் கொள்வனவு செய்தல். | (6,629,177.12) | |
| **நிதிசார் செயற்பாடுகளினூடாக தேறிய காசுப் பாய்ச்சல்** | | **(5,976,755.37)** |
| அரச வழங்கல் (மூலதனம்) | 9,200,000.00 | |
| திறைசேரியின் வழங்கல் (வாகனம்) | - | |
| உலக சுகாதார அமைப்பு நிதியம் | - | |
| முதியோர் தாபரிப்புத் திட்டம் | 3,150.00 | |
| | | **9,203,150.00** |
| **காலப்பகுதி ஆரம்பத்திலிருந்த நிதி மற்றும் நிதிசார் பாய்ச்சலின் தேறிய மேலதிகம்/பற்றாக்குறை** | | **(246,010.16)** |
| காலப்பகுதி ஆரம்பத்திலிருந்த நிதி மற்றும் நிதிசார் பாய்ச்சல் | | **943,849.56** |
| காலப்பகுதி இறுதியிலிருந்த நிதி மற்றும் நிதிசார் பாய்ச்சல். | | **697,839.40** |

**ஒப்பம்**

**இமெல்டா சுகுமார்**
தலைவர்
முதியோர்களுக்கான தேசிய சபை.

**ஒப்பம்**

பி.கே.எஸ்.சுபோதினி
பணிப்பாளர் (பதில்)
முதியோர்களுக்கான தேசியசெயலகம்

# மேலதிக பட்டியல்கள்

| 2012 (ரூபா) | குறிப்பு 01 | | ஆளுக்குரிய வேதனாதிகள் | 2013.12.31 (ரூபா) |
|---|---|---|---|---|
| 21,063,628.80 | | (I) | சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் | 21,609,505.29 |
| 3,279,334.21 | | (II) | ஊழியர் சேமலாப நிதியம் | 3,451,767.26 |
| 819,833.36 | | (III) | ஊழியர் நம்பிக்கை நிதியம் | 862,941.56 |
| 434,119.87 | | (IV) | மேலதிக நேரக் கொடுப்பனவு | 526,636.77 |
| 43,263.18 | | (V) | விடுமுறை தினச் சம்பளம் | 42,173.25 |
| 7,364,847.41 | | (VI) | வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு | 8,428,803.22 |
| 3,162,251.76 | | (VII) | வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு | 3,987,219.43 |
| **36,167,278.59** | | | **மொத்தம்** | **38,909,046.78** |

| 2012 (ரூபா) | குறிப்பு 02 | | பிரயாணச் செலவுகள் | 2013.12.31 (ரூபா) |
|---|---|---|---|---|
| 1,726,508.60 | | (I) | உள்நாடு | 628,279.99 |
| 104,593.52 | | (II) | வெளிநாடு | - |
| **1,831,102.12** | | | மொத்தம் | **628,279.99** |

| 2012 (ரூபா) | குறிப்பு 03 | | வழங்கல்கள் மற்றும் அலுவலகத் தேவைப்பாடுகள் | 2013.12.31 (ரூபா) |
|---|---|---|---|---|
| 1,357,091.05 | | (I) | எழுதுகருவிகள் மற்றும் அலுவலகத் தேவைப்பாடுகள். | 310,941.12 |
| 481,019,25 | | (II) | எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி | 404,726.85 |
| 3,795.00 | | (iii) | சீருடைகள் | 20,000.00 |
| **1,841,905.30** | | | மொத்தம் | **735,667.97** |

| 2012 (ரூபா) | குறிப்பு 04 | | பராமரிப்புச் செலவுகள் | 2013.12.31 (ரூபா) |
|---|---|---|---|---|
| 344,127.59 | | (I) | வாகனங்கள் | 455,161.80 |
| 31,882.29 | | (II) | எந்திரப் பொறித் தொகுதிகள் மற்றும் பொருத்துதல்கள். | 78,064.50 |
| **376,009.88** | | | மொத்தம் | **533,226.30** |

| 2012 (ரூபா) | குறிப்பு 05 | | ஒப்பந்தச் சேவைகள் | 2013.12.31 (ரூபா) |
|---|---|---|---|---|
| 6,410.00 | | (I) | போக்குவரத்து | 85,000.00 |
| 556,349.49 | | (II) | தபால் மற்றும் தொலைத் தொடர்பாடற் சேவைகள் | 354,161.51 |
| 880,895.54 | | (III) | மின்சாரம் மற்றும் எரிபொருள் | 696,760.81 |
| 3,069,354.73 | | (IV) | குத்தகை வாடகை | - |
| 150,338.00 | | (V) | சுத்தஞ் செய்வதற்கான கட்டணம் | 53,463.92 |
| 59,705.00 | | (VI) | பத்திரிகை | 30,263.00 |
| 254,380.76 | | (VII) | சிற்றுண்டிச் செலவுகள் | 25,116.50 |
| 74,797.00 | | (VIII) | கணக்காய்வுக் கட்டணம் | 50,000.00 |
| 264,569.31 | | (IX) | பாதுகாப்புச் செலவுகள் | - |
| 409,503.00 | | (X) | தேசிய சபைக்கான கொடுப்பனவுகள் | 733,457.36 |
| 1,103,014.00 | | (XI) | பராமரிப்புச் சபைக்கான கொடுப்பனவுகள் | 700,597.00 |
| 511,631.00 | | (XII) | பிற கொடுப்பனவுகள் | 786,802.36 |
| - | | (XIII) | வங்கிக் கட்டணம் | 10,050.00 |
| 421,834.50 | | (XIV) | பணிக்கொடை | 1,527.698.50 |
| **7,762,773.43** | | | **மொத்தம்** | **5,053,370.96** |

| 2012 (ரூபா) | குறிப்பு 06 | | ஆளுக்குரிய வேதனாதிகள் | 2013.12.31 (ரூபா) |
|---|---|---|---|---|
| 5,685,602.00 | | (I) | கிராமிய முதியோர் சங்கங்களை அமைத்தல் | 6,425,811.00 |
| 571,797.00 | | (II) | அடையாள அட்டைகளை வழங்குதல் | 411,690.00 |
| 974,389.00 | | (III) | பகல் நேரப் பராமரிப்பு நிலையங்களை அமைத்தல் மற்றும் சுய தொழில் உதவி வழங்குதல். | 336,995.00 |
| 538,847.20 | | (IV) | வெளியீடுகள் | 154,000.00 |
| 1,062,380.00 | | (V) | பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல். | 3,108,601.37 |
| 8,005,650.00 | | (VI) | மருத்துவ சிகிச்சைகளை நடாத்துதல். கண் வில்லைகள் மற்றும் செவிப்புலக் கருவிகளை வழங்குதல். | 5,098,500.00 |
| 791,448.00 | | (VII) | சர்வதேச முதியோர் தினக் கொண்டாட்டம் | 5,837,470.80 |
| 1,247,951.65 | | (VIII) | முதியோர் இல்லங்களுக்கு உதவி வழங்குதல். | 1,299.056.09 |
| - | | (IX) | பிற செலவுகள் | 2,516,791.33 |
| 8,734,528.54 | | (X) | முதியோர் இல்லங்களைப் புதுப்பித்தலும் மற்றும் பராமரித்தலும். | 4,743,161.10 |

| | | | | |
|---|---|---|---|---|
| 321,000.00 | | (XI) | பயிற்சி மற்றும் திறன் விருத்தி | 526,594.00 |
| 1,401,166.48 | | (XII) | உலக சுகாதார அமைப்பு | - |
| 182,739,000.00 | | (XIII) | ரூபா. 1000/- மூத்த்த பிரஜைகளுக்கான கொடுப்பனவு | - |
| **211,713,759.87** | | | **மொத்தம்** | **30,458,670.69** |

| 2012 (ரூபா) | குறிப்பு 07 | | தேய்மானத்தின் அளவு | 2013.12.31 (ரூபா) |
|---|---|---|---|---|
| 920,232.58 | | (I) | வீட்டுத் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 1,474,953.03 |
| 1,655,000.00 | | (II) | வாகனங்கள் | 1,655,000.00 |
| 216,002.40 | | (III) | எந்திரப்பொறித் தொகுதிகள் மற்றும் பொருத்துதல்கள். | 521,555.68 |
| **2,791,234.98** | | | **மொத்தம்** | **3,651,508.71** |

| 2012 (ரூபா) | குறிப்பு 08 | | வங்கிக் கணக்கு | 2013.12.31 (ரூபா) |
|---|---|---|---|---|
| 195,564.17 | | (I) | வங்கி மீதி - க/இல. - 228075 | 63,428.96 |
| 321,451.40 | | (II) | வங்கி மீதி - க/இல. - 228075 | 204,426.09 |
| 216,002.40 | | (III) | வங்கி மீதி - க/இல. - 228075 | 429,984.35 |
| **943,849.56** | | | **மொத்தம்** | **697,839.40** |

| 2012 (ரூபா) | குறிப்பு 09 | | திரண்ட செலவுகள் | 2013.12.31 (ரூபா) |
|---|---|---|---|---|
| 793,685.00 | | (I) | கொடுப்பனவு செய்யப்படவேண்டிய பிரயாணச் செலவுகள் | 97,403.00 |
| 86,510.00 | | (II) | கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய அடையாள அட்டைக் கொடுப்பனவுகள் | 52,675.00 |
| - | | (III) | கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய அச்சிடுதற் கொடுப்பனவுகள் | 154,000.00 |
| - | | (IV) | கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய மேலதிக நேரக் கொடுப்பனவுகள் | 49,075.14 |
| 56,800.00 | | (V) | கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய தேசிய சபைக் கொடுப்பனவுகள் | - |
| 45,277.77 | | (VI) | கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய தபால் மற்றும் தொலைபேசிக் கட்டணங்கள் | 9,230.94 |
| 54,868.20 | | (VII) | கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய பாதுகாப்புக் கட்டணங்கள் | - |
| 10,080.00 | | (VIII) | கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய சுத்தஞ் செய்தற் கொடுப்பனவுகள் | - |
| 4,390.00 | | (IX) | கொடுப்பனவு செய்யப்படவேண்டிய பத்திரிகைக் கட்டணங்கள் | 2,140.00 |
| 2,793,900.00 | | (X) | கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய கண்வில்லைகள் மற்றும் சுகாதார சிகிச்சைக் கொடுப்பனவுகள் | 792,000.00 |
| 114,204.79 | | (XI) | கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய மின்சாரம் மற்றும் நீர்க் கட்டணங்கள் | - |
| 549,389.00 | | (XII) | கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய பகல்நேர நிலையங்களுக்கான உதவிகள் | 99,000.00 |
| - | | (XIII) | கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய முதியோர் இல்ல உதவிகள் | 102,588.81 |
| 50,731.85 | | (XIV) | கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய எழுதுகருவிச் செலவுகள். | 301,777.04 |
| 1,413.015.00 | | (XV) | கட்டிடங்களை ஒதுக்குதல் | 386,361.83 |
| 3,555,000.00 | | (XVI) | கிராமிய முதியோர் சங்கங்களை அமைத்தல். | 1,707,450.00 |
| - | | (XVII) | சர்வதேச முதியோர் தினக் கொண்டாட்டம் | 93,664.00 |
| - | | (XVIII) | வங்கிக் கட்டணங்கள் | 750.00 |
| - | | (XIX) | வீட்டுத் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 2,290,647.00 |
| - | | (XX) | எந்திரப் பொறித்தொகுதி மற்றும் பொருத்துதல்கள் | 1,527,766.40 |
| **9,527,771.61** | | | மொத்தம் | **7,666,529.16** |

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கருத்து

முதியோர்களுக்கான தேசிய சபையினால் 2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு நிதிக் கூற்று மற்றும் அதே திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான நிதி செயலாற்றுகை மற்றும் நிதிப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கியல் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிப்பு தகவல்களின் சாராம்சம் உள்ளடங்கும் 2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான நிதிக் கூற்று, 1971 ஆம் இலக்கம் 38 ஐ கொண்ட நிதிச் சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 2000 ஆம் இலக்கம் 09 ஐ கொண்ட முதியோர்களுக்கான உரிமைகளை பாதுகாக்கும் சட்டத்தின் 20 (3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிஸ குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) ஆம் யாப்பில் உள்ளடங்கும் ஒழுங்குமுறைகளின் பிரகாரம் எனது பணிப்பின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதிச் சட்டத்தின் 14 (2) (சீ) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த அறிக்கையுடன் பிரகடனப்படுத்தப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துத் தெரிவிப்பு மற்றும் அவதானிப்பு இந்த அறிக்கையில் தரப்பட்டுள்ளது. நிதிச் சட்டத்தின் 13 (7) (ஏ) பிரிவின் பிரகாரம் விவரமான அறிக்கை ஒன்று சபையின் தலைவருக்கு 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி அனுப்பப்பட்டுள்ளது.

## கணக்காய்வாளர் தலைமையதிபதியின் கருத்து

இந்த அறிக்கையில் 2.2. பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்கள் மூலமான அழுத்தங்கள் தவிர்ந்த, நிதிக் கூற்றுக்கள் மூலம் 2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முதியோர்களுக்கான தேசிய சபையின் நிதி நிலைமைகள் மற்றும் அதே திகதியுடன் முடிவுற்ற வருடத்தின் நிதிச் செயற்பாடு மற்றும் நிதி மூலங்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடுகளுக்கு அமைவாகவும் உண்மையாகவும், நியாயமான நிலைமைகளைக் காட்டும் விதத்திலும் உள்ளது என்பது எனது கருத்தாகும்.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல. } எல்எஸ்/I/பி/என்சீஈ/1/13/04
My No.

ඔබේ අංකය
உமது இல. }
Your No.

දිනය
திகதி } 2015 சனவரி 31
Date

தலைவர்,

முதியோருக்கான தேசிய சபை

**முதியோருக்கான தேசிய சபையின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

முதியோருக்கான தேசிய சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள், ஏனைய விளக்கத் தகவல்கள் என்பவற்றின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2000 இன் 09 ஆம் இலக்க முதியோர் உரிமைகளைப் பாதுகாத்தல் அதிகாரச்சட்டத்தின் 20(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசிலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விபரமான அறிக்கை சபையின் தலைவருக்கு 2014 செப்தம்பர் 01 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, .- இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

2

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

3

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களைத் தவிர்த்து 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முதியோருக்கான தேசிய சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 21(இ) பந்தியின் பிரகாரம் தேறிய சொத்துக்கள் / உரிமை மாற்றங்கள் தொடர்பான கூற்று கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சொத்தொன்றின் பெறுமானத் தேய்வு செய்யக்கூடிய பெறுமதி அதன் பயன்படு ஆயுட்காலம் முழுவதும் முறையான அடிப்படையொன்றில் பெறுமானத் தேய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், சபையினால் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டில் பெறுமானத் தேய்வும் கைதவிர்க்கப்படும் ஆண்டில் பெறுமானத் தேய்வு செய்யாமை என்ற கொள்கை அடிப்படையில் பெறுமானத்தேய்வு கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 652,422 தொகை நிதி செயலாற்றல் கூற்றில் வருமானமாக எடுக்கப்படாமல் நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக ஆண்டின் பற்றாக்குறை அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) வாகனங்களின் திரண்ட பெறுமானத் தேய்வுக்கான ஏற்பாடுகளின் சரியான தொகை ரூபா 4,495,000 ஆக இருந்த போதும், நிதி நிலைமைக் கூற்றில் திரண்ட பெறுமானத் தேய்வுக்கான ஏற்பாடுகள் ரூபா 4,060,000 ஆக காண்பித்த காரணத்தால் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் நிலையான சொத்துக்கள் ரூபா 435,000 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2013 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,912,472 பெறுமதியான 356 கெமராக்கள் தளபாட உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

**2.2.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருப்புக்களின் பெறுமதியின் கீழ் ரூபா 610,411 காண்பிக்கப்பட்டிருந்த போதும், அதன் பட்டோலைகளின் கூட்டுத்தொகை ரூபா 556,511 ஆக இருந்தமையால் ரூபா 53,900 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

பின்வரும் விடயங்களுக்கு முன்னால் காட்டப்பட்டுள்ள சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

5

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) முச்சக்கர வண்டி | 250,000 | வாகனக் கோவை, பொருள் மெய்மையாய்வு அறிக்கை |
| (ஆ) கிராமிய முதியோர் குழு வங்கி மீதி | 472,500 | 135 குழுக்களின் உறுதிப்படுத்தல்கள் |
| (இ) முதியோர் அடையாள அட்டைக்கான புகைப்படங்கள் | 15,748 | செலவுகளை உறுதிப்படுத்து வதற்காக பிரதேச செயலகங்களின் தகவல்கள் |

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை**

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் | |
| (i) 8(1) ஆம் பிரிவு | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீடு நிர்வாக சபையால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 14(3) ஆம் பிரிவு | 2012 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) 1990 ஒக்தோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை. | |
| (i) 2.11 ஆம் பிரிவு | 06 மாதங்களுக்கு ஒருமுறை எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | |
|---|---|---|
| | (ii) 2.12 ஆம் பிரிவு | குழாம் வானங்களுக்கு எரிபொருளைப் பெற்றுக்கொள்ளும் போது பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2002 பெப்ரவரி 22 ஆம் திகதிய 01/2002 ஆம் இலக்க, 1992 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய 26/92 ஆம் இலக்க மற்றும் 1994 ஆகஸ்ட் 03 ஆம் திகதிய 26/92(1) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | அரச நிறுவனத்தின் பெயர் மற்றும் அரச இலட்சினை என்பன வாகனத்தில் பொறிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க நல்லாளுகை தொடர்பான பொது முயற்சிகள் சுற்றிக்கையின் 8.3.9 ஆம் பிரிவு | சபையிடமிருந்த இரண்டு மோட்டார் வாகனங்கள் சமூக சேவைகள் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தன. |
| (உ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | ரூபா 12,745,759 ஆன தளபாடங்கள் மற்றும் ரூபா 3,969,075 ஆன இயந்திர உபகரணங்களுக்கு முறைப்படி நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி விளைவு ரூபா 8,737,766 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 12,176,526 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 3,438,760 தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. சமர்ப்பிக்கப்பட்ட கணக்கின் பிரகாரம் அரசாங்க மானியங்கள் ரூபா 5,484,471 ஆல் அதிகரித்தமை, செயற்பாட்டுச் செலவினம் ரூபா 182,514,293 இனால் குறைந்தமை பிரதானமாக இந்த அதிகரிப்பிற்கு தாக்கமளித்திருந்தன.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஏனைய செயற்பாட்டுச் செலவினத்திற்காக மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்ட செலவினம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பீடாக ரூபா 181,255,089 ஆல் குறைவடைந்திருந்ததுடன், முதியோருக்கு மாதந்தம் ரூபா 1,000 கொடுப்பனவுகள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் அமைச்சினால் செயற்படுத்தப்பட்டமை இதற்கு காரணமாக இருந்தது.

(ஆ) உடன்படிக்கை சேவைகளுக்காக மீளாய்வாண்டில் செலவிடப்பட்ட செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது ரூபா 2,709,402 ஆல் அல்லது 35 சதவீத்தால் குறைவடைந்திருந்ததுடன், கட்டிட வாடகைக்காக முன்னைய ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 3,069,346 தொகை மீளாய்வாண்டில் பூச்சிய பெறுமதியை எடுத்தமை இதற்கு காரணமாக இருந்தது.

8

விගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

AGDSL

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முதியோர் குழுக்களுக்கு நிதியுதவிகளை வழங்குதல்

570 கிராமிய முதியோர் குழுக்கள் மற்றும் பிரதேச மட்டத்தில் 20 முதியோர் குழுக்கள் என 590 குழுக்களுக்காக ரூபா 6,150,000 தொகையான நிதியுதவியை வழங்குவதற்கு இலக்கிடப்பட்டிருந்ததுடன், செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் ரூபா 5,000 வீதம் 1557 கிராமிய முதியோர் குழுக்களுக்காக ரூபா 7,785,000 தொகை வழங்க வேண்டியிருந்த போதும், உள்ளவாறாக ரூபா 7,500 வீதம் 34 பிரதேச குழுக்களுக்காக ரூபா 255,000 நிதியுதவி வழங்கப்பட்டிருந்தன. எனினும் செயன்முன்னேற்ற அறிக்கைகளில் 20 பிரதேச குழுக்களுக்கு ரூபா 150,000 நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாக காட்டப்பட்டிருந்தமையால் உள்ளவாறான அளவை விட செயன்முன்னேற்ற அறிக்கைகளில் 14 குழுக்களுக்கு ரூபா 105,000 தொகை வழங்கியமை குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) முதியோர் அடையாள அட்டை வழங்குதல்

50,000 முதியோர் அடையாள அட்டைகளை வழங்குவதற்கு மீளாய்வாண்டில் ரூபா 2,000,000 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், செயன்முன்னேற்ற அறிக்கைகளில் ரூபா 446,000 தொகை செலவிடப்பட்டு 17,821 அடையாள அட்டைகள் வழங்கப்பட்டிருந்தன. எனினும் உள்ளவாறாக 15748 புகைப்படங்கள் வழங்கப்பட்டிருந்தமையால் அதன் செயன்முன்னேற்றம் 32 சதவீதமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(இ) பகல் நேர முதியோர் நிலையங்களுக்காக பணத்தை ஈடுபடுத்தல்**

---

மீளாய்வாண்டின் போது 36 பகல் நேர முதியோர் நிலையங்களுக்காக ரூபா 2,000,000 தொயையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 31 பகல் நேர நிலையங்களிற்கு ரூபா 782,000 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தன. திட்டமிடப்பட்டதை விட 05 பகல்நேர நிலையங்களுக்கு குறைவாக நிதி பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், நிதி செயன்முன்னேற்றம் 39 சதவீதமாக இருந்தது.

**(ஈ) அறிவூட்டுதல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்**

---

138 அறிவூட்டுதல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதி வரையிலும் 4 நிகழ்ச்சித்திட்டங்களே நடாத்தப்பட்டிருந்தமையால் பௌதீக செயன் முன்னேற்றம் 3 சதவீதமாக இருந்தது.

**(உ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிறைவேற்றப்படாத செயற்பாடுகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பிரதேச மட்டத்தில் 100 முதியோர்கள் அறிவூட்டுதல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் ஆண்டின் போது ஒரு நிகழ்ச்சித்திட்டமேனும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) இலங்கையில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் முதியோர் சனத்தொகைக்காக தேவையான நலன்புரி, பாதுகாப்பு மற்றும் தாதியர் சேவை என்பவற்றை வீட்டு மட்டத்தில் வழங்கக் கூடிய தொழிலாளர் குழுவொன்றை பயிற்சியளித்து சமூகமயப்படுத்தும் நோக்குடன் 04 பயிற்சிப் பாடநெறிகள் நடாத்தி தெரிவு செய்யப்பட்ட குழுவிற்கு பயிற்சியை வழங்குவதற்கு ஆண்டின் ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அச்செயலமர்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) ஆண்டின் போது 30 ஆலோசனை நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், 03 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்த போதும் செயன்முன்னேற்ற அறிக்கையில் 06 நிகழ்ச்சித்திட்டங்கள் எனக் காட்டப்பட்டிருந்தது.

(iv) ஆண்டின் போது 04 ஓய்வு முன் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், 01 நிகழ்ச்சித்திட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்த போதும் செயன்முன்னேற்ற அறிக்கையில் 02 நிகழ்ச்சித்திட்டங்கள் எனக் காட்டப்பட்டிருந்தது.

(v) அச்சிடல் செயற்பாடுகளுக்காக ரூபா 1,000,000 செலவு செய்து முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் திருத்தப்பட்ட அதிகாரச்சட்டத்தில் 5,000 பிரதிகளை அச்சிட்டு பகிர்ந்தளிப்பதற்கும் 1000 முதியோர் சஞ்சிகைகளை அச்சிடுவதற்கும் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், குறித்த செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் திட்டமிடப்பட்டதன் பிரகாரம் அதிகாரச்சட்டத்தின் 5000 பிரதிகள் அச்சிடப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) கண் வில்லைகளைக் கொள்வனவு செய்தலும் பகிர்ந்தளித்தலும்**

1,700 கண் வில்லைகளும் 70 கேட்டல் உபகரணங்களும் நோயாளர்களுக்கு வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், 1,782 உதவிபெறுனர்களுக்கு கண் வில்லைகள் வழங்கப்பட்டதாக குறிப்பிட்டிருந்த போதும் இருப்புப் பதிவேட்டின் பிரகாரம் 1420 வில்லைகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தமையால் செயன்முன்னேற்ற அறிக்கையில் 362 கூடுதலாக காட்டப்பட்டுள்ளது. அவ்வாறே 70 கேட்டல் உபகரணங்கள் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 45 கேட்டல் உபகரணங்கள் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தன.

**(எ) பராமரிப்பு சபை கூட்டம்**

பராமரிப்பு சபை கூட்டங்களுக்காக ரூபா 850,000 நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், ரூபா 765,000 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. பராமரிப்பு சபைகளுக்காக 247 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும், 149 இற்கே தீர்வுகள் வழங்கப்பட்டிருந்தமையால் பௌதீக முன்னேற்றம் 60 சதவீதமாக இருந்தது.

11

விගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

(ஏ) முதியோர் இல்லங்களை புனரமமைப்பதற்காக உதவி வழங்குதல்

---

26 முதியோர் இல்லங்களின் புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 10,000,000 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், 15 இல்லங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டதாக செயல்முன்னேற்ற அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்த போதும், உள்ளவாறாக 12 முதியோர் இல்லங்களுக்கு மாத்திரம் உதவிகள் வழங்கப்பட்டிருந்தன. உள்ளவாறான செலவினம் ரூபா 5,486,474 ஆக இருந்ததுடன், செயன்முன்னேற்ற அறிக்கைகளில் ரூபா 5,787,000 ஆக காட்டப்பட்டிருந்ததுடன், நிதி செயல்முன்னேற்றம் 55 சதவீதமாக இருந்தது.

(ஐ) சர்வதேச முதியோர் தின விழா

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் முதியோர் தின விழாவிற்கான செலவினம் ரூபா 5,000,000 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், செயல்முன்னேற்ற அறிக்கைகளில் பிரகாரம் செலவினம் ரூபா 6,120,600 தொகையாக இருந்த போதும், நிதிசார் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் செலவினம் ரூபா 6,146,894 ஆக இருந்தமையால் செயல்முன்னேற்ற அறிக்கைகளில் ரூபா 26,294 செலவினம் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ii) சர்வதேச முதியோர் தின விழாவிற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூபா 8,251,000 தொகை மற்றும் உள்ளவாறான செலவினமான ரூபா 6,146,894 தொகையுடன் ஒப்பிடும் போது ரூபா 2,104,106 ஆன மிகை மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்தது.

12



(ஒ) **2013 ஆண்டில் நிறைவேற்றப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காணப்படாத செயற்பாடுகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முதியோர் தொடர்பாக ஒன்றிணைந்த பிரவேசமொன்றை ஏற்படுத்துவதற்காக மாகாண மட்டத்தில் 09 செயலமர்வுகளை நடாத்தி ரூபா 1,165,197 தொகை செலவிடப்பட்டிருந்தது. 2013 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் மாகாண மட்டத்தில் இவ்வாறான செயலமர்வொன்றை நடாத்துவதற்கு நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்படாதிருக்கையில் குறித்த அங்கீகரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தை திருத்தம் செய்யாமல் முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் இச்செயலமர்வு நடாத்தப்பட்டிருந்தது. 2013 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 5,000,0000 நிதிஏற்பாட்டில் செலவிடப்பட்ட செலவினம் ரூபா 1,165,187 ஆக இருந்தமையால் நிதிசார் செயல்முன்னேற்றம் 23 சதவீதமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) 987 முதியோர் குழுக்களுக்கு ரூபா 4,935,000 தொகையான உதவிகளை வழங்குவதற்குரிய திருத்திய செயல்நடவடிக்கைத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) **அதிகாரச்சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளவற்றை செயற்படுத்தாத சந்தர்ப்பங்கள்**

---

முதியோருக்கான தேசிய சபை 2000 இன் 09 ஆம் இலக்க முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய சபையின் பின்வரும் இலக்குகள் இதுவரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(i) இலங்கையில் பாரம்பரிய பண்பாடுகள் அடிப்படையிலான குடும்ப அலகுகளை வலுவூட்டுவதற்காக அரசிற்கும் ஏனைய பொருத்தமான நிறுவனங்களுக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை பரிந்துரைத்தல்.

(ii) முதியோர் தொடர்பாக சிறுவர் மற்றும் இளைஞர் தரப்பினரால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள் அவர்களுக்கு தெளிவுபடுத்தும் நோக்கில் பாடசாலைகளிலும் ஏனைய பொருத்தமான இடங்களிலும் விரிவுரைகள், செயலமர்வுகள் மற்றும் ஏனைய நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைத்தல்.

(iii) முதியோர் தொடர்பாக சரியான மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட புள்ளிவிபரங்களை பேணிச் செல்லல்.

(iv) முதியோர்களின் பிரச்சினைகளுக்கு தாக்கம் செலுத்தும் பிரதான காரணங்கள் மற்றும் அவர்களின் தேவைப்பாடுகள் மற்றும் அபிலாசைகளை இனங்கண்டுகொள்ளும் முறையில் கற்கைகள் மற்றும் ஆராய்ச்சிகளை மேம்படுத்துதல் மற்றும் அக்காரணங்களை ஒழித்தல் அல்லது கிள்ளியெறிதல் என்பவற்றிற்காக அவர்களின் அத்தேவைப்பாடுகள் மற்றும் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

(v) முதியோர்களின் சிக்கல்கள் தேவைப்பாடுகள் மற்றும் அபிலாசைகள் தொடர்பாக பொது மக்களை அறிவூட்டும் நோக்கில் கற்கைகள் மற்றும் ஆராய்ச்சிகளிலும் கண்டுபிடிப்புகளுக்கும் பொருத்தமான சகல நடைமுறைகள் மூலம் உரிய பொறுப்பேற்றலை வழங்குதல்

(vi) முதியோர்களின் நிலைமையை மேம்படுத்துவதற்காக அரசினாலும் அரசார்பற்ற நிறுவனங்களாலும் மற்றும் ஆட்கள் சபையினாலும் ஆரம்பிக்கப்பட்டு மற்றும் செயற்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள், முன்மொழிவுகள் என்பவற்றை கணிப்பிடலும் கூட்டிணைத்தலும்.

(vii) முதியோர்களுக்காக வைத்தியக் காப்புறுதி நலன் திட்டத்தை அறிமுகப்படுத்துதலும் செயற்படுத்தலும்.

(viii) முதியோர்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு முதியோர்களுக்கான சம்பளங்களைச் செலுத்துதல் மற்றும் சம்பளம் செலுத்தாத தொழில் சந்தர்ப்பங்கள் தொடர்பான பெயர்ப் பட்டியலைப் பேணுதல் மற்றும் இயலுமான எல்லா சந்தர்ப்பங்களிலும் அவர்களுக்கு வருமானத்தை ஈட்டித்தருகின்ற தொழிலில் ஈடுபடுவதற்கு உதவுதல்

(ix) பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக முதியோர்களின் இயலுமை மற்றும் திறன்களை உள்ளடக்கி அவர்கள் தொடர்பான பெயர்ப் பட்டியலைப் பேணுதல்.

**4.2 பதவியணியினர்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கை 117 ஆக இருந்த போதிலும், வெற்றிட பதவிகளின் எண்ணிக்கை 08 ஆக இருந்தன.

(ii) பதவிநிலை உத்தியோகத்தர்களில் 50 சதவீதம் வெற்றிடங்களாக இருந்ததுடன், பதவிநிலைத்தரமல்லாத உத்தியோகத்தர்கள் பதவிகளில் வெற்றிடங்களின் அளவு 5 சதவீதமாக இருந்தது.

**4.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முதியோர் நலன்புரிக்காக பராமரிக்கப்பட்டு வரும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,871,796 தொகையான நிலையான வைப்புக்கள் மற்றும் அதன் வருடாந்த வட்டி வருமானம் ரூபா 652,422 என்பவற்றை முதியோர் நலன்புரிக்காக பயன்படுத்தாது விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) முதியோர் மேவுகை ஈடுபாட்டாளர் நிகழ்ச்சித்திட்டத்திற்காக பராமரிக்கப்பட்டு வரும் வங்கிக் கணக்கொன்றில் காணப்படும் பணம் கடந்த மூன்று ஆண்டுகளில் உரிய செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படாதிருந்ததுடன், நலன்புரிக்காக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அம்மீதி ரூபா 429,984 ஆக இருந்தது.

**(இ) முதியோர் படி செலுத்துதல்**

70 வயதுக்கு மேற்பட்ட முதியோருக்கு இடையே பொதுசன உதவி அல்லது சமூர்த்தி உதவி பெறும் முதயோர்களுக்கு ரூபா 1,000 படிகள் கொடுப்பனவு தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 யூன் மாதத்தின் போது முதியோர் கொடுப்பனவுகளாக 19 மாவட்டங்களுக்குரிய அரச வங்கிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்ட ரூபா 1,550,000 தொகையில் வெவ்வேறு காரணங்கள் அடிப்படையில் கொடுப்பனவுகள் செலுத்தாமையால் எஞ்சிய தொகை அதற்குரிய வட்டியுடன் மொத்தம் ரூபா 1,569,925 தொகை மீண்டும் 2013 செப்தம்பர் 13 ஆம் திகதி முதியோருக்கான தேசிய சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

(ii) நாடுபூராகவும் இருக்கும் முதியோர் படிகள் பெறுனர்கள் தொடர்பான தகவல் முறையொன்றை நிறுவகத்தினால் 2014 ஆகஸ்ட் 29 ஆம் திகதி கணக்காய்வு சந்தர்ப்பம் வரையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டின் போது பிரதேச செயலகங்கள் ஊடாக செலுத்தப்பட்ட பணத்தொகையின் அளவு, செலுத்தப்பட்ட நலனாளிகளின் எண்ணிக்கை, செலுத்தப்படாத பணத்தொகை மற்றும் நலனாளிகள் மரணமடைந்தமை தொடர்பான தகவல்கள் பிரதேச செயலகங்களிலிருந்து பெறப்பட்டு தகவல் முறைமையொன்று நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

முதியோருக்கான தேசிய சபைக்குரியதல்லாத வெளிநாட்டு சுற்றுலா ஒன்றிற்காக ரூபா 188,449 ஆன முற்பணத் தொகையொன்று சமூக சேவைகள் அமைச்சிற்கு செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கணக்குகளைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அந்நிதிக்கூற்றுக்கள் 03 மாத தாமதத்தின் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 வருடாந்த அறிக்கைகளை சபைக்குச் சமர்ப்பித்தல்

2012 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கை 2014 ஆகஸ்ட் 27 ஆம் திகதி வரை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டின் வருமானத்திற்கும் செலவினத்திற்கும் மற்றும் உள்ளவாறான வருமானத்திற்கும் செலவினத்திற்கும் இடையே 10 சதவீதம் தொடக்கம் 66 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடு செயற்திறனான முகாமைத்துவக் கட்டுப்பாட்டு முறைமையாக பாதீடு பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது சபைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வாகனக் கட்டுப்பாடு

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

சமාජ සේවා අමාත්‍යාංශය
சமூக சேவைகள் அமைச்சு
Ministry of Social Services
ජාතික වැඩිහිටි මහලේකම් කාර්යාලය
முதியோர்களுக்கான தேசிய செயலகம்
National Secretariat for Elders

මගේ අංකය / எனது இல / My No. NSE/FC3/GENERAL/QUIRES
ඔබේ අංකය / உமது இல / Your No.
දිනය / திகதி / Date. 2014.09. 26

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

பத்தரமுல்லை.

**முதியோருக்கான தேசிய சபையின் 2013 டிசம்பர் இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2) சீ பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

குறிப்பிட்ட கணக்காய்வு விசாரணை தொடர்பாக முன் வைக்கப்பட்டுள்ள எல் எஸ்/பீ/என்சீஈ/1/13/09 விடயம் தொடர்பாக விளக்கத்தை கீழே குறிப்பிட்டுள்ளேன்.

02. நிதிக் கூற்றுக்கள்

2.2.1 இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

(I) இலங்கையின் புதிய அரச பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் தொடர்பாக நிறுவன அதிகாரிகளுக்கு அனுபவம் அல்லது முன்னோடி தேர்ச்சி இன்மை , நியமம் இல 01 இல் 21 பந்தியின் (இ) பிரகாரம் வரவு செலவு மதிப்பீட்டில் செலவு மற்றும் உண்மைச் செலவின் ஒப்பீட்டு அறிக்கை முன்வைக்கப்படவில்லை. கணக்காய்வில் குறித்துக் காட்டியதன் பின்பு 2014 ஆம் ஆண்டு முதல் திருத்தமான அறிக்கையை இறுதி நிதிக் கூற்றுக்களுடன் முன்வைக்க நடவடிக்கை எடுக்கிறேன்.

(II) மேற்கூறப்பட்ட பதிலுரை பொருந்துவதாக இருப்பதோடு தேறிய சொத்துக்கள் / உரிமை மாற்றங்கள் தொடர்பாக கணக்காய்வில் குறித்துக் காட்டியதன் பின்பு 2014 ஆம் ஆண்டு முதல் இறுதி நிதிக் கூற்றுக்களுடன் முன்வைக்கின்றேன்.

(III)2013 ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திற்காக 76 மில்லியன் ரூபாவும் ,மூலதனச் செலவிற்காக 20 மில்லியன் ரூபாவும் அனுமதிக்கப்பட்டன. இதனடிப்படையில் வரவு செலவு திட்டத்தில் குறிப்பிடப்பட்ட மொத்தத் தொகையை மீறி செலவு செய்ய முடியாதென்பதையும் அவ்வவ் விடயத் தலைப்புகளுக்காக மேலதிகமாக செலவு செய்தல். மீதியாகவுள்ள விடயத் தலைப்புகளிலிருந்து முதியோருக்காக பெற்றுக்கொண்டதற்காக தேசிய சபையின் அனுமதியைப் பெற்றதையும் திறைசேரிக்கு (பாதீட்டு பணிப்பாளர் நாயகம்) அறிக்கையை சமர்பித்துள்ளேன்.

(IV)இந் நிறுவன அலுவலர்களுக்கு அனுபவம் அல்லது முன் தேர்ச்சி இருக்கவில்லை என்பதையும் மீளாய்விற்கான வருடத்தின் இறுதி நாளில் சமர்ப்பித்த நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வில் குறிப்பிட்டு காட்டியதன் பின்னர் 2014 வருடம் முதல் திருத்திய மாதிரியின் கீழ் இறுதி நிதிக் கூற்றுக்களுடன் முன் வைக்க நடவடிக்கை எடுத்துள்ளேன்.

ලිපිනය : 2 වන මහල, D කොටස, සෙත්සිරිපාය - දෙවන අදියර, බත්තරමුල්ල.
முகவரி : 2ஆம் மாடி ,தொகுதி D, செத்சிறிபாய - கட்டம் II, பத்திரமுல்லை
Address : 2nd Floor , Block D, Sethsiripaya - II Stage, Baththaramulla.
ඊ-මේල් / ஈ-மெயில்/ E-mail : nsemss@sltnet.lk
දුරකථන / தொலைபேசி/ Telephone:
අධ්‍යක්ෂ / பணிப்பாளர் / Director : 2187045
කාර්යාලය / அலுவலகம் / Office : 3094543
ෆැක්ස් / பெக்ஸ் / Fax : 0112187015

2.2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) 2012 டிசம்பர் 31க்கு வேறு மீண்டுவரும் செலவுகளுக்கான தொகை ரூ 211 ,713 ,759.87 ஆக காணப்பட்டது. தவறுதலாகரூ 34,179 ,097.78 ஆக குறிப்பிடப்பட்டுள்ளது. இதனைத் திருத்தி முன் குறிப்பிடப்பட்டுள்ளது.இதனைத் திருத்தி முன்னுள்ள வருடங்களில் முன்வைக்க நடவடிக்கை எடுத்துள்ளேன்.

(ஆ) இங்கு குறிப்பிட்டதற்கமைய சமூக சேவைப் பணிப்பாளருக்கு பெற்றுக் கொடுத்த முற்பணத்தை செலுத்தும் போது நானாவித வருமானக் கணக்கில் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த தவறை 2014 ஆம் ஆண்டு திருத்தி முன்வைக்க நடவடிக்கை எடுத்துள்ளேன்.

(இ) 2012 ஆம் ஆண்டு முதியோருக்கான விழாவிற்காக பிரதேச செயலாளர், குருநாகலுக்கு அனுப்பிய 10,000 ரூபாவிற்கு அலுவலக முதியோர் விழா நடாத்தப்படவில்லை என்பதையும் தவறுதலாக பதிவேட்டில் நானவித வருமானத்தின் கீழ் இரு முறை கணக்குப் பதியப்பட்டுள்ளது. இத்தகைய தவறு எதிர் காலத்தில் நிகழாமல் இருப்பதற்கு அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கி முறையாக விதத்தில் கணக்குகளை பதிய நடவடிக்கை எடுத்துள்ளேன்.

(ஈ) பயிற்சி மற்றும் அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு குறிப்பிட்ட பதிவேடுகளில் கணக்கு தவறான முறையில் பதியப்பட்டுள்ளது.

உ) மேற்படி கணக்கு தவறாக கணக்கிலிடப்பட்டுள்ளதை கணக்காய்வின் போது சுட்டிக் காட்டியதன் பின்னர் தவறு எதிர்காலத்தில் நடைபெறாவண்ணம் இவ் கணக்கை திருத்துவதற்கான நடவடிக்கை எடுப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளேன்.

ஊ) நிலையான வைப்பு என்பது முதியோர் மற்றும் முதியோர் நலன்புரி தொடர்பாகவே வைப்பிடப்படுகின்றது. மேற்படி நலன்புரி நடவடிக்கையை செய்வதற்குரிய பணியை செயற்படுத்துவதற்கான நிர்வாக சபையின் அனுமதி கிடைக்கப் பெறவில்லை என்பதையும் வட்டிப் பணம் வருமானமாகவும் காட்டப்படவில்லை.

ஏ) 2013.12.31 திகதியில் தொகையின் பெறுமதி 610,411.26 ஆகும். எனது உப கோவையின் 37 ஆம் இலக்கத்தின் கீழ் A4 போட்டோக் கொப்பி 93 பொதி 565.00 வீதம் 52,600.80 சதமும் மற்றும் இல 48 இன் கீழ் ரோணியோ பக்கட் 4 உம் , ஒன்று 324 ரூபா வீதம் 1299.20 சதமும் தொகை பதிவுப் புத்தகத்தில் தவறுதலாக பதியப்பட்டுள்ளது.

தளபாட உபகரணங்கள் திருத்தப் பெற்று 2014 ஆம் ஆண்டிற்குரியதை முன்வைக்க நடவடிக்கை எடுத்துள்ளேன்.

ஏ) 2012 வருடத்திற்குரிய விழா முற்பணக் கணக்கின் தலைப்பின் பொருத்தப்பாடு 2013 வருடத்தின் நிதி தலைப்பின் பொருத்தப்பாடு 2013 வருடத்தின் நிதி கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படுவதோடு தவறுதலாக தேறிய சொத்தின் தலைப்பினை திருத்துவதற்கு முடியாமல் போனதன் காரணமாக தேறிய சொத்து ரூ 1,000.00 மேலதிகமாக காட்டப்பட்டுள்ளது. இதனை அடுத்த வருடத்திற்கான நிதிக் கூற்றில் திருத்தி முன் வைக்க நடவடிக்கை எடுத்துள்ளேன்.

ஐ) வாகனங்களின் பெறுமானத் தேய்வை 2014 ஆம் ஆண்டின் இறுதி நிதிக் கூற்றில் திருத்தி முன்வைக்க நடவடிக்கை எடுத்துள்ளேன்.

ஒ) பிரதேச செயலாளர் காரியாலயத்திலுள்ள முதியோர் மேவுகை ஈடுபாட்டாளர், சமூக சேவை அதிகாரிகள்,மாகாணசமூக சேவை அதிகாரிகள் , மாவட்ட சமூக சேவை அதிகாரிகள் , சமூக அபிவிருத்தி அதிகாரிகள், அலுவலக தேவைகளுக்காக கமராவைப் பயன்படுத்தியதனால் (அடையாள அட்டைக்கான படங்களை எடுப்பதற்கு) அலுவலக உபகரணம் என கருத்தினைக் கொண்டு கணக்கின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

க)2012 வருடத்தின் கணக்காய்வின் போது குறிப்பிட்டுக் காட்டியதன் பின்பு 2013 ஆம் ஆண்டு முதல் வைப்பு கணக்கு வைப்புப் புத்தகம் ஊடாக நடாத்தி செல்ல நடவடிக்கை எடுத்ததோடு கணக்கிலிடும் போது தவறுதலாக குறிக்கப்பட்டுள்ளமையால் திருத்தப் பெற்று திரும்பவும் அடுத்த வருடத்தில் முன்வைக்க நடவடிக்கை எடுத்துள்ளேன்.

க)இங்கு காட்டப்பட்டுள்ள பணம் வங்கி அறிக்கையில் 2011 ஆம் ஆண்டு முதல் இனங்காணப்படாத பெறுகையற்ற இரண்டாகும். (27,314.31 மற்றும் 2,350.00) இப் பணம் 2013.12.12 ஆம் திகதி பற்றுச் சீட்டு மூலம் (G/22 989558) காசேட்டில் பதியப்பட்டதோடு நடவடிக்கை எடுத்ததோடு தொடர்ந்து தேடிய பின்பு வழங்கப்படுவதற்கு முடியாத வகையிலான சந்தேகங்கள் காணப்பட்டதால் வைப்புக் கணக்கிற்கு வைப்பிலிடப்பட்டது. அதனைப் பிரதி எடுப்பதற்கு முடியாமல் போய்விட்டது. இப் பதிவேட்டினை புதுப்பிப்பதற்கான நடவடிக்கையை எடுப்பேன் என தயவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஐ) இந்த பிரதி வெல்லவாய , ஹிக்கடுவ , திஹகொட பகுதியில் 2012 வருடத்தில் முதியோர் தின விழா நடைபெறாததால் பிரதேச செயலாளரால் மீளவும் திருப்பி

அனுப்பப்பட்ட நிதியாகும். இதனை வைப்பில் இட்டதோடு மாற்றுப் பத்திரத்தின் மூலம் வருமானக் கணக்கிற்கு மாற்றுவதற்கு 2014 செப்டெம்பர் மாதத்தில் நடவடிக்கை எடுத்துள்ளேன் என தயவுடன் தெரிவிக்கிறேன்.

ட) முதியோர் மேவுகை ஈடுபாட்டாளர் நிகழ்ச்சித்த திட்டமானது நிதி படைத்தவர்களால் வழங்கப்படும் நன்கொடையாலே நடாத்தப்படுகின்றது. இவை தனிப்பட்டவர்களால் நேரடியாக வங்கியில் வைப்பிலிடப்படுகின்றது. 24,000 ரூபா நிதி திருமதி சாந்தி ஹின்டட் அவர்களால் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. அதனை வங்கி அறிக்கை மூலமாகவே அறிந்து கொண்டோம். இது 2014 ஜனவரி மாதம் 9 ஆந் திகதி மேவுகை ஈடுபாட்டாளர் கணக்கு புத்தகத்திற்கு உள்வாங்கப்பட்டுள்ளது. வருடத்தில் இனங் காணப்படாத முடியாத வகையில் இருந்தமையால் கணக்கில் வைக்க முடியாமல் போனது என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ட) உலக சுகாதார நிறுவனத்தால் 2012 ஆம் ஆண்டில் கைப்பணிக் கண்காட்சிக்காக வழங்கப்பட்ட நிதியின் மிகுதியாகும். இந்த நிதி நன்கொடைப் பணமாகும். இதனால் மீளவும் கொடுப்பனவு செய்ய முடியாமல் இருப்பதோடு முன் வரும் காலத்தில் அரச வருமானக் கணக்கிற்கு பெற்றுக் கொடுப்பதற்கு அல்லது நிர்வாக சபையின் தீர்மானத்திற்கேற்றவாறு செய்வதற்கும் தீர்மானித்துள்ளேன்.

ன) இந்த பதிவேட்டுக் கணக்கு தவறுதல் காரணமாக திருத்தமான முறையில் கொண்டு நடாத்த முடியாமல் போனதென்பதையும் முன் வரும் காலத்தில் திருத்தமாக செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் என தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

| விடயம் | பெறுமதி | சமர்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| அ. நிலையான சொத்து | 12,745,749 | நிலையான சொத்து பதிவேட்டினை தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதோடு விடயத்துடன் தொடர்புடைய அலுவலர்களுக்கு இது விடயமாக அனுபவமின்மை மற்றும் நிலையான சொத்து பதிவேடு மிகவும் பரந்துபட்ட விடயம் என்பதையும் , திருத்தமாக பதிவேடு பூரணப்படுத்தப்படவில்லை என்பதனை ஏற்றுக் கொள்கிறேன். முன்வரும் காலங்களில் அலுவலர்களுக்கு முறையான பயிற்சியை பெற்றுக் கொடுத்து இந்த பதிவேட்டினை புதுப்பிப்பதற்கான நடவடிக்கை எடுப்பேன். என தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். |
| இயந்திர உபகரணங்கள் | 3,969,075 | |
| ஆ) முச்சக்கர வண்டி | 250,000 | இது தொடர்பான கோவை காணாமல் போயுள்ளது. தொடர்ந்து கோவைகள் களஞ்சியப்படுத்தல் அறையில் தேடிக் கண்டு பிடிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படடுள்ளன. ஆனால் பாதுகாப்பு பெட்டகத்திலுள்ள பதிவுச் சான்றிதழ்களின் பிரதிகளைப் பெற்றுக் கொண்டு புதிய கோவையொன்றை ஆரம்பித்திருக்கிறோம். இந்த முச்சக்கர வண்டி தற்போது மன்னார் நகரிலுள்ள சாந்தோம் முதியோர் இல்லத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. |
| இ) முற்பணம் | 1,000 | 1000.00 ரூபா முற்பண நிதி 2011 ஆம் ஆண்டில் முன் கொண்டு செல்லப்பட்ட திருப்பிச் செலுத்தப்படாத முற்பணமாக 2013 முற்பண பதிவேட்டில் குறிப்பிடப்படவில்லை இவ் நிதி 2013 ஆண்டில் திரும்ப செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| ஈ) மத்திய நிலையங்களுக்கான உபகரணங்கள் வழங்கல் | 775,000 | இந்த மத்திய நிலையங்களுக்கு உபகரணங்கள் பெற்றுக் கொண்டமை தொடர்பாக பிரதேச செயலாளரின் ஊடாக பற்றுச் சீட்டு உறுதிப்படுத்துவதற்கான தகவல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன உறுதிப்படுத்தலுக்கான சான்றுகளை அனுப்பாத பிரதேச செயலாளர் அலுவலகங்களுக்கு நினைவூட்டற் கடிதங்களை அனுப்பி தேவையான விபரங்களை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கை நடைபெற்று வருகிறது. |
| உ) முதியோர் தின விழாவிற்கான சீருடைகளை வழங்கல் | 57,925 | 2013 வருடத்தில் சீருடைகளை வழங்குவதற்கு வழங்கப்பட்ட அனுமதிக் கடிதத்தை இதனுடன் இணைத்துள்ளேன். (இணைப்பு – 01) |
| ஊ) கிராமிய முதியோர் கமிட்டி வங்கி மீதி | | இந் நாள் வரை இதனை உறுதிப்படுத்துவதுடன் வங்கி மீதி தொடர்பான தகவல்களும் பெற்றுக் கொள்ளப்படுகிறது.தற்போது பிரதேச செயலாளர் அலுவலகம் 156 இன் 748 கமிட்டி தொடர்பாக நிதி வைப்பு செய்யப்பட்டது தொடர்பாக தகவல்கள் உள்ளது. அடிக்கடி இவ் விடயம் தொடர்பாக ஞாபகப்படுத்தும் கடிதங்களை அனுப்பி முன் வரும் காலங்களில் அவற்றின் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளேன். |
| எ) முதியோர் அடையாள அட்டைக்கான புகைப்படங்கள் | 15,748 | ஏற்பட்ட தவறு காரணமாக விடயத்திற்கு பொறுப்பான அலுவலர் ஊடாக தகவல்களை முன் வைக்கும் போது இரு முறை பதிவு குறிக்கப்பட்டுள்ளது. இத்தகைய குறைபாடுகள் எதிர்காலத்தில் வராமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளேன். |
| ஏ) முதியோர் கமிட்டி | 4,935,000 | முதியோர் கமிட்டி தொடர்பாக நாம் எதிர்பார்த்ததை விட அதிகளவான அளவு கேள்வி கிடைக்கப் பெற்றுள்ளது அவற்றுக்கு இருந்த பணிப்பாளர் மற்றும் முதியோருக்காக தேசிய சபையின் அனுமதியின் பேரில் கொடுப்பனவுகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. |

2.2.4 சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை

| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் | |
|---|---|
| (i) 8(1) ஆம் பிரிவு | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு நிதி திறைசேரியால் ஒதுக்கீடு செய்தபின்பு தேவையான வகையில் செலவு விடயம் தொடர்பாக ஒதுக்கீடு செய்தலுக்கு இந் நாள் வரைஅவ்விதமான அனுமதியொன்றை பெறவில்லை. முன் வரும் காலத்தில் கணக்காய்வின் போது குறிப்பிடப்படும் விதத்தில் அவ் விதமான அனுமதியைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன் என தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். |
| (ii) 14(3) ஆம் பிரிவு | 2012 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை 2014.09.04 ஆம் திகதி செயலாளர் சமூக சேவை அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) நிதி பிரமாணம் நி.பி 110 | நி.பி 102 இன் கீழ் நட்டம் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிப்பதற்கான வேறு குறிப்பிடப்பட்ட பதிவுப் புத்தகங்கள் இரண்டு வைக்க வேண்டுமென கணக்காய்வின் போது குறிப்பிட்டுக் காட்டியதன் பின்னர் இதனடிப்படையில்NB– 2688 இலக்கமுடைய வான் வண்டி 2013.07.18 ஆம் திகதி இடம் பெற்ற திடீர் விபத்து விடயமாக தகவல்களை உள்ளடக்கி அதனை புதுப்பித்தலுக்கான நடவடிக்கைகளை செய்ய உன்ளேன் என தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். |

| | |
|---|---|
| நி.பி 845 – (1) | (1) இந் நிறுவனத்தின் தொலைபேசி (அலுவலகம் மற்றும் வீட்டின்) தொடர்பான பதிவேட்டின் தகவல்களை உள்ளடக்கி அதனை புதுப்பித்தலுக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றேன் என தயவுடன் தெரிவிக்க விரும்புகிறேன்.<br><br>(II) மாதத்திற்குரிய தொலைபேசிக்கான கட்டணக் கொடுப்பனவு செய்யும் பதிவேடு தொடர்பாக கணக்காய்வின் போது குறித்துக் காட்டியதோடு அதனை தொடர்ச்சியாக கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) நி.பி 565 – (4) | வைப்புப் பதிவேடு தொடர்ச்சியாக புதுப்பித்தலுக்கான நடவடிக்கை எடுத்துள்ளேன். என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். |
| (iv) நி.பி 562 (2) | தவறின் காரணமாக இதற்கான குறிப்புகளை குறிப்பிட முடியாமல் போன போதும் வைப்பு திருத்தமாக கணக்கிடப்பட்டுள்ளது இதனடிப்படையில் பதிவேட்டினை தொடர்ச்சியாக புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கிறேன் என தய தெரிவித்துக் கொள்கிறேன் |
| (V) நி.பி 565 – (5) | பொது 71 படிவத்தை பயன்படுத்தி, கணக்காய்வின் பின்னர் குறித்துக் காட்டியபடி எதிர்வரும் காலங்களில் தகவல்களை பதிய நடவடிக்கை எடுக்கிறேன். என தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். |
| (vi) நி.பி 1645(ஆ) மற்றும் (இ) | கணக்காய்வில் காட்டியதன் பின்னர் குறிப்பிட்ட சம்பவ திரட்டு பதிவினை முறையாக மற்றும் திருத்தமாக பேணுவதற்கு விடய அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கி உள்ளேன் |
| (vii) நி.பி 756 மற்றும் 757 | கடந்த வருடம் முதல் வாகனம் தொடர்பாக வருடாந்தம் பொருட் பதிவேட்டினை நடாத்தி அறிக்கை சமர்ப்பிக்கும் படி அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளேன். |
| (viii) நி.பி 104(3) மற்றும் 104(4) | NB– 2688 இலக்கமுடைய வான் வண்டியின் விபத்து தொடர்பான விபரண அறிக்கையின் பிரதியை தவறுதலாக(தாமதமான) வழங்க முடியாமற் போய்விட்டது. ஆனால் இதனுடன் தொடர்புடைய அறிக்கை சமூக சேவைத் திணைக்களத்திற்கு சமர்பித்த அறிக்கையின் பிரதியை உங்களின் கவனத்திற்காக இத்துடன் சமர்பித்துள்ளேன்(இணைப்பு - 2) |
| (ix) நி.பி 1646 | கணக்காய்வில் குறிப்பிட்டுக் காட்டியதன் பின்னர் செப்டெம்பர் மாதம் முதல் குறிப்பிட்ட அறிக்கை கணக்காய்வு அதிபதிக்கு முன்வைப்பதற்கு விடயத்திற்கு பொறுப்பான அலுவலருக்கு அறிவுரை கூறியுள்ளேன். |
| (1)1990 ஒக்டோபர் 10 ஆம் திகதி இல 41/90 பந்தி | அரச அலுவலர்களுக்கு இதனடிப்படையில் செயற்பட அறிவுரை வழங்கியுள்ளேன் நிறுவனத்தின் அரச அலுவலர் ஒருவர் மாத்திரமே இருப்பதால் பிரயோக அடிப்படையில் கடினமாக உள்ளது. இதனால் நிர்வாக சேவை அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் தற்போது செயற்பட்டு வருகிறது. எதிர் வரும் காலத்தில் இந்த செயற்பாடானது அரச அலுவலர் ஒருவரின் கீழ் நடாத்துவதற்கான நடவடிக்கையைச் செய்வேன். என தயவுடன் கூறிக் கொள்கிறேன். |
| (ii) 2.11 பந்தி | முன் வரும் காலங்களில் இதனடிப்படையில் செயற்பட அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கியுள்ளேன் |
| (iii) 2002 பெப்ரவரி 22 ஆம் திகதி இல 01/200 | |
| 1992 ஆகஸ்ட் 19 ஆம் திகதி இல 26/92 (i) | கணக்காய்வில் காட்டியதன் பின்னர் பொது (Pool)வான் வண்டி தொடர்பாக அரச நிறுவனத்தின் பெயர் மற்றும் அரச இலட்சனை பயன்படுத்தப்பட்டுள்ளது. |
| (ii) 1999 பெப்ரவரி 26 ஆம் திகதி இல 2/93 04 மற்றும் 05 வது பந்தி | இதற்கு அமைய தகவல்கள் எனது இல NSE/FC3/GENARAL/QURESமற்றும் 2014.07.18 திகதியிடப்பட்ட கடிதம் மூலம் முன்வைக்கப்பட்டுள்ளது. இதன் பிரதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு – 03 ) |
| அரச வர்த்தக சுற்று நிருபம் | செயலாளர் , சமூக சேவை அமைச்சின் உத்தரவின் |

| | |
|---|---|
| 1. 2003 யூன் 30 திகதியிடப்பட்ட இ பீடி/12.8.3.9 பந்தி தொடர்பானது. | பேரில் இந் நிறுவனத்திற்கு சொந்தமான மோட்டார் வண்டி இரண்டு அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது. |

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அ. முதியோர் குழுக்களுக்கு நிதியுதவிகளை வழங்குதல்

என்னால் வழங்கப்பட்ட செயன்முன்னேற்ற வருடாந்த அறிக்கையில் பிரதேச முதியோர் குழுக்களுக்காக நிதியுதவி வழங்கும்போது பிரதேச குழுக்கள் 34 க்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளன. ஆனால் கணக்காய்வு விசாரணையின் போது 20 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் நான் எனது பதிவில் 20 என குறிப்பிட்டுள்ளமை வருட மதிப்பீட்டில் 20 என்பதையே ஆகும் ஆனால் உண்மையாக 34 பிரதேச குழுக்களுக்காக ரூ 255,000 நிதியுதவி பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) முதியோர் அடையாள அட்டை வழங்குதல்

(1) தேசிய முதியோர் செயலாளர் காரியாலயம் ஊடாக வருடாந்தம் முதியோர் அடையாள அட்டை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கை மீளாய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டபோதும் அடையாள அட்டை பிரதேச செயலாளர் கோட்ட மட்டத்தில் பெற்றுக் கொண்ட கேள்விக்கமையவே கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்.

குறிப்பிடப்பட்ட 2013 ஆம் ஆண்டிற்கான நிதியேற்பாடு செயன் முன்னேற்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டதை விட ரூபா 575.00 தொகை வேறுபாடொன்று மீளாய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதும் எதிர் வரும் காலத்தில் அவ்விதம் நடைபெறாமல் இருப்பதற்கான நடவடிக்கை எடுக்கின்றேன். அதுமட்டுமன்றி வருடமொன்றில் முதியோர் அடையாள அட்டைப் புகைப்படங்கள் 15,748 வழங்கப்பட்டுள்ள போதும் எண்ணும் போது மேலதிகபுகைப்படங்கள் 2073 என தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. எதிர்வரும் காலங்களில் இப்படியான தவறுகள் இடம் பெறாவண்ணம் நடவடிக்கைகள் எடுக்கின்றேன்.

(III) முதியோர் அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொடுக்கும் போது சாதரணமாக ஒரு சில நாட்களில் குறிக்கப்பட்ட வயோதிபருக்கான அடையாள அட்டைப் புகைப்படங்களைப் பெற்றுக் கொடுக்கும் சந்தர்பங்களில் புகைப்படங்கள் இரண்டிற்காகரூபா. 25.00 குறிக்கப்பட்ட புகைப்பட பிடிப்பாளருக்கு பெற்றுக் கொடுக்கப்படும் ஆனால் ஒரு நாளில் புகைப்படத்தை பெற்றுக் கொடுக்கும் சந்தர்பங்களில் புகைப்படம் இரண்டிற்காக ரூபா. 30.00 வழங்கப்படும் இதற்காக விலை மனுக் கோரல் சபையின் அனுமதியைப் பெற்று கொள்ளப்பட்டது என்பதை தயவுடன் தெரிவிக்கின்றேன்.

ஆ. பகல் நேர முதியோர் நிலையங்களுக்காக பணத்தை ஈடுபடுத்தல்.

தொடர்புடைய தகவல்கள் பூரணமானவை அற்றவை என்றும் திட்டமிடலை விட 05 இற்கு குறைவான பகல் நேர முதியோர் நிலையத்திற்கு நிதியுதவிகளை வழங்கப்பட்டுள்ளன. குறைபாடுகள் பூரணப்படுத்தப்பட்டு அனுப்பியதன் பின்னர் அந் நிறுவனங்கெளுக்காக தளபாடங்களை விலை கொடுத்து பெறுவதற்கு நிதி பிரித்து கொடுக்கப்பட்டுள்ளது.

இ.அச்சிடல் செயற்பாடு

(i) மற்றும் (ii) முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பான மீள் திருத்தப்பட்ட சட்டத்தின் பிரதிகள் எதிர்பார்த்த விதத்தில் வெளியிடப்பட முடியாமல் போன காரணத்தாலும் மற்றும் முதியோர்களுக்கான சஞ்சிகை தொடர்பாக அச்சுப் பதித்தலுக்கான செலவினை ஸ்ரீ லங்கா ஹெல்ப்ஏஜ் நிறுவனம் ஏற்றுக் கொள்ள முன்வந்தமை என்பவற்றால் குறித்து இலக்கை அடையக் கூடியதாக இருந்ததோடு இவ் விடயம் தொடர்பாக செலவாகவில்லை.

(iii) பதில் கடமையாற்றும் பணிப்பாளர் நியமனம் பெற்று கடமையைப் பொறுப்பேற்றது ஆகஸ்ட் மாதத்திலாகும் இதனால் மேற்படி விடயத்தைச் செய்வதற்கான திட்டமிடல் இருக்கவில்லை இதுமட்டுமின்றி வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமானது மீள் மாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை இதன் காரணமாக மேற்படி மீள் மாற்றம் செய்யப்பட்ட செயல் நடவடிக்கை திட்டமானது கணக்காய்விற்கு முன் வைக்கப்படவில்லை.

மேலும் செயல் முறைதிட்டமிடல் வரை இல்லாத போதும் சேவையின் தேவையானது மிக அதிகமாக காணப்பட்டது என்பதையும் தொடர்புடைய கமிட்டி நூல்கள்14,000 பிரதிகள் மாகாண முதியோர் குழுக்களுக்கு மற்றும்மாவட்ட முதியோர் குழுக்களுக்காக சான்றிதழ்கள் 55உம் அச்சிடப்பட்டன என்பதையும் தெரிவிக்கிறேன்.

(ஈ) திட்டமிடப்பட்ட எண்ணிக்கை 138 ஆக காணப்பட்டதால் எமது நிறுவனத்தினால் நிர்வகிக்க முடியாத காரணத்தால் பயிற்சி கருத்தரங்குகள் 4 மாத்திரமே நடந்தன.

(உ) <u>செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிறைவேற்றப்படாத செயற்பாடுகள்</u>

(i) நிகழ்சித் திட்டங்கள் 100 நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டபோதும் அலுவலர்களை தொடர்பு கொண்டு செயற்படுத்த ஆலோசனைப் பிரிவிற்கே வழங்கப்பட்டிருந்தது. இவ் அதிகாரிகளின் சேவை நேரத்தின் போது எமது அலுவலக செயற்பாடுகளுக்கு அவர்களின் நேரத்தை ஒதுக்கிக் கொள்ளல் கடினமான விடயமாகும் இதன் காரணமாக நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்தவதற்கு முடியாமல் போனது என்பதை தயவுடன் தெரிவிக்கின்றேன்.

(ii) பாடநெறியானது 04 திட்டமிட்ட போதும் கீழ்வரும் காரணங்களால் பயிற்சி செயலமர்வினை நடாத்துவதற்கு முடியாமல் இருந்தது.

- முதியோரின் தேகாரோக்கியம் மிகவும் பலவீனமாக இருந்ததால் தங்க வைப்பது கடினமான காரியமாக இருந்தது.
- போக்குவரத்து வசதிகளை பெற்றுக் கொடுத்தல் சிரமமாகும்
- மாகாண மட்டத்தில் அலுவலர்கள் செல்வதற்கான நிர்வாக செலவு இன்மை

(iii) ஆலோசனை நிகழ்ச்சித் திட்டங்கள் 30 ஐ வருடமொன்றில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்ட போதும் நிகழ்ச்சித் திட்டங்கள் 3 மட்டுமே நடைபெற்றன. இது விடயமாக செயற்படுத்திய அதிகாரி இளைப்பாறிச் சென்றதன் காரணமாக வேறு அதிகாரிஒருவரை தேடிப் பெறுதல் கடினமான விடயமாக உள்ளது. மேலும் இது விடயமாக மாகாண மட்டத்தில் அதிகாரிகளை அனுப்புவதாயின் நிர்வாக செலவு இன்மை பிரச்சனையாக உள்ளது.

(iv) கீழ்வரும் காரணங்களினடிப்படையில் நிகழ்ச்சித் திட்டங்கள் முழு அளவில் நடாத்த முடியாமல் உள்ளது.

- வளவாளர்களை தேடிக் கண்டு பிடிக்க முடியாமை
- நிர்வாக செலவு மிகக் குறைந்ததாக உள்ளது

முன்னேற்ற அறிக்கையில் நிகழ்ச்சித் திட்டங்கள் 02 நடாத்தப்பட்டதாக தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது என தயவுடன் தெரிவிக்கிறேன்.

(v) தவறுதலாக நிர்வாக அறிக்கையில் இவ்விதம் குறிப்பிடப்பட்ட போதும் திருத்தமான நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை கீழ்வருமாறு அமைய வேண்டும் ஓய்வு பெறுவதற்கான முன்னோடி வேலைத்திட்டம் ஒன்றும் மற்றும் ஆலோசனை நிகழ்ச்சித் திட்டம் 03 உம் மட்டுமே .

(vi) முழுமையான ஒதுக்கீட்டு நிதி ரூபா. 5,000,000 ஆகும். ஆனால் இவ் விடயமாக உண்மையாக செலவு செய்தது ரூபா 3,108,601 ரூபாவாகும். இவ் நிதியில் 1,885,000 வேறு செலவு விடயங்களுக்கு மாற்றப்பட நடவடிக்கை எடுத்ததோடு இதனடிப்படையில் 99.8% சதவீம் அறிக்கைப்படுத்தப்பட்டது. அத்தியாவசிய செலவு விடயங்களுக்குஒதுக்கீட்டு நிதி தேவைப்பட்டதன் காரணமாக இவ்விகிதம் வகைமாற்றம் செய்ய முடியுமான செலவு விடயங்களில் மாற்றம் செய்யப்பட்டது என்பதை குறிப்பிடப்பட வேண்டும்.

(ஊ)<u>கண்வில்லை கொள்வனவு செய்தலும் பகிர்ந்தளித்தலும்</u>

1,700 கண் வில்லைகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்ட போதும் நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தால் அவ் இலக்கை அடைய முடியாமல் போனது முன்னேற்ற அறிக்கைகளுக்கு தகவல்களைப் வழங்கும் போது விடயத்தினூடாக இருமுறை பதிவு செய்யப்பட்டு எண்ணிக்கை அதிகமாக குறிப்பிடப்பட்டுள்ளது. முன்வரும் காலங்களில் இத்தகைய குறைபாடுகளை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(எ) <u>கதிர்காமம் முதியோர் இல்லத்தை பராமரித்தல் தொடர்பான செலவு</u>

கதிர்காமம் முதியோர் இல்லத்தை பராமரித்தல் செலவின் கீழ் கதிர்காமம் உல்லாசப் பிரயாண தங்குமிடம். கதிர்காமம் முதியோர் இல்லம்

மற்றும் நிர்மானிப்பதற்கு தற்போது எதிர்பார்கின்ற ஆரம்பப் பணிகள் நடைபெற்று முடிந்து விட்டன. மாளிகா தென்ன காணி தொடர்புடைய செலவு விபரங்கள் உள்ளடக்கப்படடுள்ளன.

வேலையாட்களுக்கான சம்பளம்

சுத்திகரிப்பு பணிகள்

நீர்ப்பட்டியல் ,

மின்சாரப் பட்டியல்

மாளிகாதென்ன காணியின் காவற்காரர் தொடர்பாக கொடுப்பனவு மற்றும் அவ்விடத்தில் நிகழ்த்தப்படும் நானவித நிகழ்ச்சித் திட்டங்கள் போன்ற காரணங்களுக்கு இதன் கீழ் நிதி செலவு செய்யப்பட்டுள்ளது.

நீர்ப்பட்டியல் , மின்சாரப் பட்டியல் மற்றும்மாளிகாதென்னவில் நிகழ்த்தப்படும்நானவித நிகழ்ச்சித் திட்டங்களுக்காக உறுதியான தீர்மானிக்கப்பட முடியாத உறுதியற்ற செலவுகள் ஏற்படுகின்றன. இதனால் ஒதுக்கப்பட்ட 1,000,000/= நிதியை விட 1,96,000 ரூபாய் மேலதிகமாக செலவு ஏற்பட்டுள்ளது.

எ.<u>பராமரிப்பு சபை கூட்டம்</u>

பராமரிப்பு சபை விண்ணப்பங்கள் 247 இல் 149 விண்ணப்பங்களுக்கு செலவு வழங்கப்படடுள்ளதோடு மிகுதி விண்ணப்ப பத்திரங்கள் விடயமாக இந் நாள் வரை வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஏ. <u>முதியோர் இல்லங்களை புனரமைப்பு செய்வதற்காக உதவி வழங்கல்</u>

முதியோர் இல்லங்களை புனரமைப்பு செய்வது தொடர்பாக 15 இல்லங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளதாக முன்னேற்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தாலும் உண்மையாக 12 இல்லங்களுக்கு மாத்திரமே உதவிகள் வழங்கப்பட்டிருந்தன. என குறிப்பிட்டிருந்தேன். இத்தகைய தாமதம் முன் வரும் காலங்களில் நடைபெறாமல் இருப்பதற்கான வழிவகைகளை செய்வேன் என தயவுடன் குறிப்பிடுகிறேன்.

ஐ. <u>சர்வதேச முதியோர் தின விழா</u>

2013.09.12 திகதி நடைபெற்ற முதியோரின் தேசிய சபைக்கூடாக அனுமதி பெறப்பட்டது. (இணைப்பு – 04)

(ii) தவறு ஏற்பட்டுள்ளது சர்வதேச முதியோர் தினம் தொடர்பாக ஏற்பட்ட உண்மை செலவு 6,146,893.60 ரூபாயாகும். தவறுதலாக முன்னேற்ற அறிக்கையில் 6,120,,600 ரூபா என குறிப்பிடப்பட்டுள்ளது இத்தகைய குறைபாடுகள் முன்வரும் காலங்களில் நடைபெறாமல் இருப்பதற்காக அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளேன்.

(iii)கீழ்வரும் சேவை நடவடிக்கைகளுக்காக மதிப்பீட்டு பெறுமானத்தை விட குறைவாகவே செலவாகியுள்ளது. வெளி வளவாளர்களின் ஊடாக நிதியைத் தேடிப்பெற்று, முதியோர் விழா நடாத்துவதற்கு மதிப்பீட்டை தயாரித்த போதும் அத்தகைய நிதியை தேடிக் கொள்ள முடியவில்லை இதற்கமைய மதிப்பீடு செய்யப்பட்ட தொகை மற்றும் ஏற்பட்ட உண்மை செலவினத்திற்கிடையில் வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன.

ஒ. <u>2013 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காணப்படாத செயற்பாடுகள்</u>

மதிப்பீடு செய்யப்பட்ட கீழ் குறிப்பிடப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் அனைத்தையும் தொடர்ச்சியாக செயற்படுத்த முடியாமைக்கு நிறுவனத்தின் பணிப்பாளர் பதவி வெற்றிடமாகியமை மற்றும் அது விடயமாக பதில் அதிகாரம் கொண்ட அதிகாரி நியமனம் காரணமாக முன்னேற்பாடுகளை மேற்கொள்ள முடியாமை என காரணங்களாக உள்ளன. ஆனால் கைதவறி இவ் விடயம் தொடர்பாக நிர்வாக சபையின் அனுமதியைப் பெற முடியாமல் போய்விட்டது. இதற்கமைய எதிர் வரும் காலத்தில் இத்தகைய குறைபாடுகளை குறைத்துக் கொள்வதற்கு அதிகாரிகளை அறிவூட்டுவேன் என தயவுடன் தெரிவிக்கின்றேன்.

ஓ. <u>அதிகாரச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளவற்றை செயற்படுத்தாத சந்தாப்பங்கள்</u>

அதிகாரச் சட்டத்தின் ஆ முதல் க பந்தியில் குறிப்பிடும் மேற் கூறப்பட்ட செயற்பாடுகள்செயற்படுத்தப்படாமைக்கு கீழ்வரும் காரணங்கள் பிரதானமாக செல்வாக்கு செலுத்துகின்றன. வருடத்தில் பல வருடங்களாக நிலையான அதிகாரி ஒருவர் பணிப்பாளர் பதவியில் இன்மை, பணிப்பாளர் பதவியில் ஒரு வருடத்திற்குள் இடையிடையே அதிகாரிகள் மூவர் இடமாற்றம் பெற்றமை என்பனவாகும் இதற்கமைய இவ் வருடம் முதல் அதிகாரச் சட்டத்தின் 13ஆம் பிரிவின் பிரகாரம்‘‘ஆ’’ முதல் ‘‘க’’ பந்திவரைமுதியோர் நலன்புரி மற்றும் பராமரிப்பு தொடர்பாக செயற்படுத்த முதியோர் மேவுகை ஈடுபாட்டாளரின் நிகழ்ச்சிகளை தயாரித்தல் மற்றும் திட்டத்தை தயாரித்தல் பொறுப்பான பணி

ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்மைய எதிர்வரும் காலங்களில் அதிகாரச் சட்டத்திற்கமைய செயற்படுத்துவோம்.

4.2 <u>பதவியணியினர்</u>

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் பதவிநிலை உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதோடு, இது விடயமாக செயலாளர் சமூக சேவைகள் அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட பதவி நிலை இல்லாத பதவியணி உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

4.3 <u>செயற்பாட்டு செயற்திறனின்மைகள்</u>

(அ) இவ் விடயம் தொடர்பாக உறுதிப்படுத்த தேசிய சபையின் முன் ஒப்படைத்துள்ளோம் சபையின் உறுதிப்படுத்தல் கிடைக்கப் பெற்றதன் பின்னர் தொடர்புடைய செயற்பாடு நடைபெறும்

(ஆ) இந்த நிகழ்ச்சியானது கொடையாளர்களால் வழங்கப்பட்ட கொடைகளிலாகும் கணக்கிலுள்ள பணத்தில் பயனாளிகளுக்கு கொடுப்பனவை வழங்கல், என்பது ஓரளவு குறுகிய காலத்திற்கு செய்தாலும் தொடர்ச்சியாக நீண்ட காலத்திற்கு செய்ய முடியாத விடயமாகும். கணக்கொன்றை வைத்திருப்பதாயின் அக் கணக்கில் குறிப்பிட்ட தொகைப் பணம் வைப்பில் இருக்க வேண்டும் கொடையாளர்களால் பணம் வழங்கப்படாத சந்தர்ப்பங்களில் கணக்கிலுள்ள பணத்தைக் கொண்டு குறிக்கப்பட்ட பயனாளிகளுக்கு இடை நிறுத்தாமல் பணம் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. இதற்கமைய இக் கணக்கில் குறிப்பிடக் கூடிய தொகை வைப்பிலிடுதல் அத்தியாவசியமாகும்.

இ. <u>முதியோர் படி செலுத்துதல்</u>

(i) , (ii) மற்றும் (iii)

முதியோர் படி பெறுவோரின் தகவல்கள் அடங்கிய அமைப்பு முறை ஒன்றை தயார் செய்ய திட்டமிட்டுள்ளோம் இந் நாள் வரை மாதாந்தம் பிரதேச செயலாளர் காரியாலயம் ஊடாக பெற்றுக் கொள்ளும் பயனாளிகளின் தகவல்கள் கணனி மயப்படுத்தப்பட்டுள்ளதோடு நிரந்தரமாக அவை புதுப்பிக்கப்பட்டுள்ளன. இதனால் தகவல்களைப் பெற்றுக் கொள்ளல் என்பது இதற்கு தடையாக உள்ளது. இதற்கமைய இந் நடவடிக்கை என்பது சற்று பரந்துபட்டதாக இருப்பதோடு எதிர்காலத்தில் முதியோர் படி பெறுனர்களின் தகவல் அமைப்பு முறையொன்றை தயார் செய்வதற்கு இருக்கின்றோம் மிகத் தயவுடன் குறிப்பிடுகின்றேன்.

4.4 <u>முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்</u>

சமூக சேவை பணிப்பாளருக்கு அமைச்சு செயலாளரினால் அனுமதிக்கப்பட்ட மற்றும் ஜனாதிபதி அலுவலகத்தால் வெளிநாட்டு லீவு அனுமதிக்கப்பட்ட இரண்டு வெளிநாட்டு சுற்றுலா தொடர்பான பணத்தை வழங்குவதற்கு சமூக சேவை திணைக்களம் பின் நின்றது என்றும் அதற்கு பணிப்பாளர் பதவியில் பதில் பணிப்பாளர் இருந்தமையால் இந்த கொடுப்பனவு செய்வதற்கு இந் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. இப் பணத்தை வழங்க முடியாதென கணக்காளரால் அறிவிக்கப்பட்டதன் பின்பு அறவீடாக பெறுதல் என்ற உத்தரவாதத்தின் பேரில் முற்பணமாக வெளியிடப்பட்டது. இதற்கமைய சமூக சேவைஅமைச்சு ஊடாக பெறுகைக்கான நடவடிக்கை செய்யப்பட்டது எனக் குறிப்பிடுகிறேன்.

5.0 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகைகளும்

5.1 <u>கணக்குகளை சமர்பித்தல்</u>

நிரந்தர கணக்காளர் ஒருவர் இன்மை புதிய நிதிக் கூற்றுக்களை பயன்படுத்த வேண்டி ஏற்படல் அனுபவமுள்ள அதிகாரிகள் இல்லாதிருத்தல் போன்ற காரணங்களால் இவ் கணக்கினை குறிப்பிட்ட காலத்திற்கு முன் கொண்டு செல்ல முடியாமல் உள்ளது. எதிர்வரும் காலத்தில் இதனை விரைவாக செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் என தயவுடன் தெரிவிக்கிறேன்.

5.3 <u>வருடாந்த அறிக்கையை சபைக்கு சமர்பித்தல்</u>

எதிர்வரும் நிர்வாக சபையின் முன்வைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தயவுடன் குறிப்பிடுகிறேன்.

5.4 <u>வெளிவாரி கணக்காய்வு</u>

வெளிவாரி கணக்காய்வு மூலம் அனுப்பப்பட்ட கணக்காய்வு விசாரணை தொடர்புடைய தகவல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

5.5 <u>பாதீட்டுக் கட்டுப்பாடு</u>

வெற்றிடம் நிலவுதல், உயர் முகாமைத்துவப் பதவிக்காக பதில் கடமையாற்றல், போதுமான மூலதனச் செலவு தொடர்பாக தலைப்புகளுக்கான நிதி கிடைக்கப்பெறாமை போன்ற காரணங்கள் ஏதுவாகின்றன. (அ), (ஆ), (இ), (ஈ), மற்றும் (எ)

மேற்கூறப்பட்ட பணிகளை செய்யும் போது விசேட கவனம் செலுத்தி செயற்படவும் இவ் நிர்வாக முறையை வலுவுள்ளதாக்கி மிகத் திருத்தமாகவும் மற்றும் தகவல்களை உடனுக்குடன் புதுப்பித்து தயாரிக்க அலுவலர்களுக்கு அறிவூட்டுவேன் என தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தலைவர்

முதியோருக்கான தேசிய சபை

தேசிய முதியோர் செயலாளர் அலுவலகம்